பக்கங்கள்: 14+20 = முப்பத்திநான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 18 வள்ளுவர் ஆண்டு 2034 ஆவணி 9 செவ்வாய்க்கிழமை (26-08-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்: 271

### நல்லூர் உற்சவ நேரத்தில்

## வீதித்தடையை உதைத்துத் தள்ளி ஜீப்பைச் செலுத்திய பொலீஸார்!

யாழ்ப்பாணம்,ஒக.26

நல்லூர் கந்தசுவாமி ஆலய உற்சவத்தையொட்டி அரசடி வீதியில் அமைக்கப்பட்டிருந்த வீதித்தடையை உற்சவ சமயத்தில் பொலீஸார் பலாத்காரமாகத் திறந்து ஜீப்பில் உள்ளே சென்ற சம்பவம் நேற்று மாலை 5 மணிக்கு இடம்பெற்றது.

உற்சவ நேரத்தில் திரளும் பக்தர்களின் நலன்கருதி ஆலயப் பகுதிக்கு வாகனங்கள் செல்வதற்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது. இதற்காக ஆலய சுற்று வீதிகள் ஊடாகச் செல்லும் வீதிகளில் வீதித்தடைகள் அமைக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு அரசடி வீதியில் அமைந்துள்ள வீதித்தடை ஊடாக நேற்றுப் பிற்பகல் 5 மணியளவில் ஆலயப் பகுதிக்கு அத்துமீறிச் செல்ல முற்பட்ட பொலீஸாரின் ஜீப்பை அந்த தடைமுகாமில் பணியில் இருந்த தொண்டர்கள் தடுத்தனர். அப்போது அந்த ஜீப்பில் இருந்து இறங்கிய பொலீஸ் கான்ஸ்டபிள் ஒருவர் வீதித்தடைக்காக இரு பரல்களின் மீது வீதியின் குறுக்கே போடப்பட்டிருந்த மரத்தை உதைத்துத் தள்ளி வீழ்த்தினார். பின்னர் பலாத்காரமாக ஜீப்பை உள்ளே கொண்டு சென்றனர். இந்த சம்பவத்

(14ஆம் பக்கம் பார்க்க)



நல்லூரில் உதைத்தெறியப்பட்ட வீதித் தடைக்கருகே பொலீஸார்.

### நல்லூரில் இன்று ரதோற்சவம்

யாழ்ப்பாணம்,ஒக.26

நல்லூர் கந்தசுவாமி ஆலய தேர் உற்சவம் இன்று இடம்பெறவுள்ளது.

இன்று அதிகாலை 6.15(பழைய நேரப்படி) மணிக்கு வசந்த மண்டபப் பூசை இடம்பெறும் அதைத் தொடர்ந்து 7மணிக்கு முருகன் தேரில் ஆரோகணிப்பார்.

இந்த உற்சவத்தில் கலந்து முருகனின் அருளைப்பெற பல்லாயிரக் கணக்கான மக்கள் இன்று நல்லையில் கூடுவர். (ஒ-3-10)

**இன்றைய உதயனுடன் நல்லூர் ஆலய ரதோற்சவ சிறப்புமலர் இணைக்கப்பட்டுள்ளது. தவறாது கேட்டுப் பெற்றுக்கொள்ளவும்**

### பக்தர்களுக்கு இடையூறாக

## இந்து கலாசார அமைச்சரும் ஆலய வீதியில் வாகன பவனி

யாழ்ப்பாணம்,ஒக.26

நல்லைக் கந்தன் ஆலயத்தில் நேற்று இரவு சப்பரத்தில் சுவாமி வீதியுலா வந்துகொண்டிருந்தசமயம், ஆயிரக்கணக்கில் கூடியிருந்த பக்தர்களிடையே இந்துகலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் மூன்று வாகனங்களில் சென்றுள்ளார்.

ஆலயச் சூழலில் வாகனங்கள் ஏதும் அனுமதிக்கப்படாத நிலையில் அமைச்சர் தனது படை பட்டாளங்களுடன் சென்றமை பக்தர்கள் மத்தியில் வெறுப்பை ஏற்படுத்தியதை அவதானிக்க முடிந்தது.

ஆலய மேற்கு வீதியில் சப்பரம் நகர்ந்து கொண்டிருந்தசமயம், ஆலயத்தின் முன்புறத்தில் இருந்து தெற்கு வீதி வழியாக பக்தர்களிடையே, தொண்டர்கள் வழி ஏற்படுத்திக் கொடுக்க அமைச்சரின் மூன்று வாகனங்களும் சென்றன. இது பக்தர்களுக்கு இடைஞ்சல் விளைவித்ததாக பக்தர்கள் விசனம் தெரிவித்தனர். (ஒ-3)

# ஒன்பது தமிழ் மீனவரை மூதூரில் காணவில்லை!

### வன்னியில் மிதிவெடி அகற்றும் பணி ஆரம்பம்

வன்னிக்கு வருகைதந்துள்ள தாய்லாந்து கண்ணிவெடி அகற்றும் நிபுணர் குழு மனிதநேயக் கண்ணிவெடி அகற்றும் உறுப்பினர்களுக்கு பயிற்சி அளிக்கும் பணியை நேற்று ஆரம்பித்துள்ளனர்.

பரந்தனில் இந்தப் பயிற்சி ஆரம்பிக்கப்பட்டது. இளைப்பாறிய இராணுவ அதிகாரி தலைமையிலான பத்துப் பேர் கொண்ட இக்குழுவினர் ஒரு மாதம் வன்னியில் தங்கி பயிற்சிகளை வழங்குவர். (ஒ-3)

## அவர்கள் சென்ற படகு இறங்குதுறையில் மீட்பு!!

மூதூர்,ஒகஸ்ட்26

**மூதூரில் ஒன்பது தமிழ் மீனவர்களைக் காணவில்லை. அவர்கள் கடலுக்குச் செல்லப் பயன்படுத்திய படகு இறங்குதுறையில் அநாதரவாகக் கிடக்கிறது. மீனவர்கள் தொழிலை முடித்துக்கொண்டு கரை திரும்பிய பின்னர் சம்பூருக்குச் செல்லும் போதே காணாமற்போனதாகக் கூறப்படுகிறது.**

கடந்த 15ஆம் திகதி இறால்குழி நாவலடிப் பகுதியில் தங்கியிருந்து மீன்பிடிக்கச் சென்ற சம்பூரைச் சேர்ந்த ஒன்பது தமிழ் மீனவர்களே நேற்று முன்தினம் தமது தொழிலை முடித்துக் கொண்டு சம்பூருக்குத் திரும்பிச் சென்றபோது காணாமற்போயினர் என்று கூறப்படுகிறது

நேற்றுமுன்தினம் மீனவர்களைத் தேடிச்சென்ற அவர்களின் உறவினர்கள் மூதூர் இறங்குதுறைப் பகுதியில் மீனவர்கள் பயணித்த படகு அநாதரவாக இருப்பதைக் கண்டுபிடித்துள்ளனர்.

மயில்வாகனம் மாரிமுத்து (வயது 51), தெய்வேந்திரன் ராஜன் (வயது 16), சண்முகராசா மயூரன் (வயது 16), நடராஜா ராமச்சந்திரன் (வயது 20), யோகேந்திரன் திலகன் (வயது 16), சின்னத்தம்பி நாகரஞ்சன் (வயது 17); வைரமுத்து ஜபி (வயது 30), தில்லை

(14ஆம் பக்கம் பார்க்க)

## அரசுப் பிரதேசங்களில் இடம்பெறும் சம்பவங்களுக்கு நாம் பொறுப்பல்ல!

### சம்பூரில் கண்காணிப்புக்குழுவிடம் புலிகள் தெரிவிப்பு

மூதூர்,ஒக.26

கிழக்கு மாகாணத்தின் பாதுகாப்பு, அண்மையில் அங்கு இடம்பெற்ற சம்பவங்கள் ஆகியவை குறித்து போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் ரிக்வே டெலிவ்சன் நேற்று சம்பூரில் புலிகளின் திருகோணமலை மாவட்டத் தலைவர்களுடன் பேச்சு நடத்தினார்

திருகோணமலை மாவட்ட புலிகளின் இராணுவத் தளபதி கேணல் பதுமன், அரசியற்துறைப் பொறுப்பாளர் திலக் ஆகியோர் இப்பேச்சில் கலந்துகொண்டனர்.

அரசின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தல இடம்பெறும் சம்பவங்களுக்கு விடுதலைப் புலிகள் பொறுப்பாளிகளாக மாட்டார்கள். அரசாங்கமே அதற்கு பொறுப்பேற்கவேண்டும் என்று இச் சந்திப்பில் புலிகளின் தலைவர்கள் கூறினர்.

குரங்குபாஞ்சான் முகாம் அமைந்திருக்கும் பிரதேசம் தமது கட்டுப்பாட்டுப் பிரதேசம் என்பதற்கான ஆதாரங்களைச் சுட்டிக்காட்டி அப்பிரதேச முகாமை தம்மால் விட்டுக்கொடுக்க முடியாதென்பதையும் புலிகள் வலியுறுத்தினர்.

நேற்றுக்காலை சீனன்குடாவுக்கு

(14ஆம் பக்கம் பார்க்க)

## திருகோணமலையில் நேற்று பூரண ஹர்த்தால்: வீதிகள் வெறிச்சோடின; புறநகரும் செயலிழந்தது

திருகோணமலை,ஒக.26

திருகோணமலை நகரிலும் நகரை அண்டிய பகுதிகளிலும் நேற்று பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. கடைகள், வர்த்தக நிலையங்கள், வங்கிகள் யாவும் மூடப்பட்டிருந்தன. அரச அலுவலகங்கள் இயங்கவில்லை. வாகனப் போக்குவரத்துக்கள் நடைபெறவில்லை.

இந்தக் ஹர்த்தால் காரணமாக வீதிகள் வெறிச்சோடின. மூன்றாம் தவணைக்காக நேற்று ஆரம்பிக்கப்படவிருந்த பாடசாலைகளும் இயங்கவில்லை. சந்தைகளும் செயற்படவில்லை. வழமைநிலை முற்றாகப் பாதிக்கப்பட்டிருந்தது.

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கிடையிலான சமாதானப் பேச்சுக்களுக்கு எதிரான சதிமுயற்சிகளைக் கண்டிப்பது உட்பட ஐந்து முக்கிய விடயங்களை முன்வைத்தே இக் ஹர்த்தால் மேற்கொள்ளப்பட்டது.

திருகோணமலை பொங்கு தமிழ் சமூகம் ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுத்திருந்தது. திருகோணமலை நகரில் மட்டுமன்றி, உப்புவெளி, அநுராதபுரச் சந்தி, சீனன்குடா ஆகிய புறநகர் பகுதிகளும் ஹர்த்தாலால் செயலிழந்திருந்தன.

நகரிலுள்ள சோனகத்தெரு, ஜமாலியா ஆகிய பகுதிகளிலும் கடைகள் பூட்டப்பட்டிருந்தன. மீன், மரக்கறிச் சந்தைகளில் பெரும்பான்மையின வியாபாரிகள் சிலர் இருந்த

(14ஆம் பக்கம் பார்க்க)

## தியாகி திலீபன் நினைவுத்தூபி நேற்று நல்லூரில் திறப்பு!


யாழ்ப்பாணம்,ஒக.26

நல்லூரில் புனரமைக்கப்பட்ட தியாகதபம் லெப்.கேணல் திலீபனின் நினைவுத்தூபி நேற்று திறந்துவைக்கப்பட்டது.

நேற்று மாலை 4.45மணியளவில் இடம்பெற்ற இந்தத் திறப்பு விழா நிகழ்வு நல்லூர்க் கோட்ட எழுச்சிப் பேரவைச் செயலாளர் சி.வீ.கே.சிவஞானம் தலைமையில் இடம்பெற்றது.

இதில் பொதுச்சுடரினை யாழ்.-நல்லூர் கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் ஈஸ்வரன், நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் பொ. கனகசபாபதி, முன்னாள் யாழ்நல்லூர் கோட்ட கல்விப் பணிப்பாளர் இராஜகோபால், தமிழீழ மாணவர் பேரவைப் பிரதிநிதி கண்ணன், யாழ்.மாவட்ட பொது அமைப்புக்கள் ஒன்றியத்தின்

(14ஆம் பக்கம் பார்க்க)



நல்லூரில் திறந்துவைக்கப்பட்ட தியாகி திலீபனின் நினைவுத் தூபி.


(மேலும் படங்கள் 2ஆம் பக்கத்தில்)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# தியாகி திலீபன் நினைவுத் தூபி திறப்பு நிகழ்வில்.....



யாழ். - நல்லூர் கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் பொ.ஈஸ்வரன், நல்லூர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் பொ.கனகசபாபதி, யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளர் சூசை ஆனந்தன், மாவீரர் கப்டன் றொஷானின் தந்தை மா.இ.ரத்தினசிங்கம், யாழ்.மாவட்ட எழுச்சிப் பேரவைச் செயலாளர் சொலமன் சூ.சிறில், தமிழீழ மாணவர் பேரவைப் பிரதிநிதி கண்ணன் ஆகியோர் பொதுச் சுடர் ஏற்றுகின்றனர்.



யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி தேசியக்கொடி ஏற்றுவதையும் மாவீரர் தூயவனின் தந்தையார் பி.செல்லத்துரை நினைவுத்தூபியை திரைநீக்கம் செய்துவைப்பதையும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் அ.விநாயமூர்த்தி, எம்.கே.சிவாஜிலிங்கம் மற்றும் தமிழீழ விடுதலை அணி பொதுச் செயலாளர் ம.க.ஈழவேந்தன் உட்பட நிகழ்வில் கலந்துகொண்டவர்களில் ஒருபகுதியினரையும் படங்களில் காணலாம்.
(படங்கள் : வசந்தன்)

# மாவீரர் நினைவுகளை அகற்ற எண்ணிய எதிரிக்கு பாடம் புகட்டியுள்ளனர் மக்கள்!

## தியாகி திலீபன் நினைவுத் தூபி திறப்பு நிகழ்வில் இளம்பரிதி உரை

யாழ்ப்பாணம்,ஓக.26

நினைவுத் தூபிகளைத் தகர்த்தால் மாவீரர்களின் நினைவுகளை மக்களின் மனங்களில் இருந்து அகற்றி விடலாம் என்று கனவுகண்ட எதிரிக்கு திலீபன் நினைவுத் தூபியை மீளக் கட்டியெழுப்பி மக்கள் பாடம் புகட்டி விட்டனர்.

- இவ்வாறு தெரிவித்தார் யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி.

நேற்று நல்லூர் ஆலயப் பகுதியில் புனரமைப்புச் செய்யப்பட்ட தியாகதபம் லெப்கேணல் திலீபனின் நினைவுத் தூபி திறப்புவிழாவில் நினைவுரை நிகழ்த்தும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

முன்னாள் மாநகர ஆணையாளர் சி.வி.கே.சிவஞானம் தலைமையில் நடந்த இந்நிகழ்வில் இளம்பரிதி பேசுகையில் கூறியதாவது:-

அடிக்க அடிக்க அடிபணியும் இனமாகவும், அழிக்க அழிந்துபோகக் கூடிய இனமாகவும் தமிழினம் இருந்து விடும் எனக் கருதியது சிங்கள இனம். இப்போது இது ஓர் அடிபணியாத, அழிக்கமுடியாத இனம் என்பதை அது உணர்ந்து நிற்கின்றது. நினைவுத் தூபிகளை இடித்தழித்தால் மக்கள் மனங்களில் இருந்து தியாகச் சுடரான மாவீரர்களின் நினைவுகளை அழித்துவிடலாம் என எண்ணினான் எதிரி. ஆனால், அது சாத்தியமற்றது என்பதனை இன்று தியாகி திலீபனின் நினைவுத் தூபியை மக்களே கட்டி எழுப்பி திறந்துவைத்து எதிரிக்குப் பாடம் புகட்டியுள்ளார்கள்.

மாவீரன் திலீபனின் தியாகத்தின் உறுதியை மனங்களிலே கொண்டு உரிய இடத்தில் சிறப்பாக இத்தூபியை மக்கள் அமைத்துள்ளார்கள்.

இதேவேளை - எமது போராட்டத்தின் முக்கிய கட்டத்தில் எமது மக்கள் பல வரலாற்றுத் திருப்பம் மிக்க சாதனைகளைப் புரிந்துள்ளார்கள். இதனை உலகமே வியந்து நிற்கின்றது.

ஒரு விடுதலைப் போராட்டம் மக்களின் உறுதியான ஆதரவைப் பெற்றிருக்கும்போது அப்போராட்டச் சக்தியை எந்தவொரு சக்தியாலும் அடக்கி ஒடுக்க முடியாது. இதனை எமது போராட்டம் எடுத்துக்காட்டி நிற்கின்றது.

இராணுவ நடவடிக்கையையும், அரசியல் நடவடிக்கையையும் ஒரே நேரத்தில் மேற்கொண்டு எம் மக்களின் மத்தியில் மிகுந்த செல்வாக்குடன் விளங்கிய பெருமை, மாவீரன் லெப்டினன்ட் கேணல் திலீபனையே சாரும்.

மக்களின் விடுதலையே உண்மையான போராளியின் உள்ளத்தில் உறுதியான தீபமாய் ஒளிரும். இதனைத் திலீபனின் சொல், செயல்களில் கண்டுகொள்ளக்கூடியதாக இருந்தது.


சர்வதேச மட்டத்துக்கு எமது போராட்டத்தை கொண்டுவந்த பெருமைக்குரியவர் திலீபன். அன்று இடைக்கால நிர்வாகம் வேண்டி திலீபன் உண்ணாநோன்பிருந்தபோது இலங்கை அரசும் இந்திய அரசும் அதனைப் புறக்கணித்திருந்தன.

இன்று இடைக்கால நிர்வாகம் பற்றிய கோரிக்கையை நாம் முன்வைக்கின்றபோது அதனைத் தூக்கி எறியமுடியாத நிலையில் இலங்கை அரசும் மற்றைய அந்நிய சக்திகளும் உள்ளன. இதற்கு சர்தேச அளவில் எமது போராட்டத்தின் உண்மைத் தன்மை புலப்படுத்தப்பட்டமையே பிரதான காரணமாகும். அத்தோடு நாம் விடுதலைப் போராட்டத்துக்குரிய சரியான பாதையில் செல்கின்றோம், வலுவாக நிற்கின்றோம் என்பதுவும் காரணங்களாகும். சிறந்த தலைமை எம்மை வழிநடத்திச் செல்கின்றது. இனியும் காலம் தாழ்த்தினால் தமிழர் சேனை வென்றுவிடும் என்ற அச்சம் அரசுக்கு ஏற்பட்டுள்ளமையும் ஒரு காரணமாகும்.

சரியான தலைமை, சிறந்த வீரர், தியாகமும் பலமுமாக போராட்டத்திற்கு அணி சேர்க்கும் மக்கள் இவற்றை எதிர்க்கவோ அடக்கவோ எவராலும் முடியாது.

எமது மண்ணில் எம் மக்களின் விடுதலை உணர்வு ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் வீறு கொண்டெழுந்திருக்கிறது. சர்வதேசரீதியில் தமிழனை உயர்திக்காட்டியுள்ள சக்தியை தந்துள்ளவர்கள் எமது மக்கள்.

அரசியல் விடுதலை நோக்கி எமது போராட்டம், பேச்சு என்னும் வடிவில்



முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இடைக்கால நிர்வாகப் பொறுப்பு எமமிடம் வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை உரக்க எழுந்து நிற்கின்ற நிலையில் அதுகுறித்து எமது சட்ட வல்லுநர்கள் பரீஸில் ஆராய்ந்து வருகின்றனர். எம்மிடம் சகல திறமையும் உண்டு என்பதை அரசு உணர்ந்துள்ளது. உலகம் உணர்ந்துள்ளது. இடைக்கால நிர்வாகத்தை நடத்துவதற்கு மக்கள் அங்கீகாரம் உண்டு. ஆனால், சில தீயவர்கள் அதனைக் குழப்பிக் கொண்டே வருகிறார்கள். இத்தகைய குழப்பவாதிகளின் போக்குக்கு அரசு இடம்கொடுத்து தீவிர போக்கையே மீண்டும் கடைப்பிடிக்க முனைந்தால் தமிழர்களின் விருப்பப்படியானதொரு நாடு உருவாகும் என்பதை யாவரும் உணர்ந்துகொள்ளவேண்டும் - என்றார் இளம்பரிதி.

(ஓ-5-12-86-ரி)

# அரசு வைத்தியசாலை ஊழியர்கள் இன்று சுகவீன லீவுப் போராட்டம்

## சுகாதார அமைச்சினால் லீவுகள் ரத்து

அரசாங்க வைத்தியசாலைகளைச் சேர்ந்த ஊழியர்கள் இன்று ஒரு நாள் சுகவீன லீவுப்போராட்டத்தை மேற்கொள்ளவிருக்கின்றனர். இதனால் இந்த ஊழியர்களின் லீவுகள் இன்று முதல் சுகாதார அமைச்சினால் ரத்துச் செய்யப்பட்டிருக்கின்றன.

சம்பள முரண்பாடுளை நீக்குதல் உட்பட பல கோரிக்கைகளை முன்வைத்து வைத்தியசாலை ஊழியர்கள் இப்போராட்டத்தில் ஈடுபடுவர். இன்று காலை 6 மணி முதல் நாளை காலை 7மணிவரை போராட்டம் நடைபெறும்.

இப்போராட்டத்தில் பங்கு பெறப் போவதில்லை என்று தாதிமார் சங்கம் அறிவித்திருக்கின்றது.

சுகாதார சேவைகளை தடையின்றி மேற்கொள்வதற்காகவே லீவுகள் ரத்துச் செய்யப்பட்டிருக்கின்றன என்று சுகாதார அமைச்சின் செயலாளர் டாக்டர் ரெஜி பெரேரா தெரிவித்திருக்கின்றார்.

இதேவேளை, சுகாதார சிற்றூழியர்கள் போராட்டம் யாழ்.ஆஸ்பத்திரியிலும் இடம்பெறவிருக்கின்றது

(ஒ-139-149)



தியாகி லெப்.கேணல் திலீபனின் நினைவுத்தூபி திறப்பு நிகழ்வின் போது போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் வந்து படம்பிடித்துச் சென்றனர்.

# காலியிலிருந்து ஜே.வி.பி. பேரணி நேற்றுக்காலை ஆரம்பமானது

கொழும்பு,ஓக.26

காலியிலிருந்து கொழும்புக்கு ஜே.வி.பி. நடத்தும் மக்கள் சக்தி பேரணி நேற்றுக்காலை காலியில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

காலி, சமனல மைதானத்திலிருந்து ஆரம்பமான இப்பேரணிக்கு கட்சியின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா, பிரசார செயலாளர் விமல் வீரவன்ச ஆகியோர் தலைமை தாங்கினர். நான்கு கட்டங்களாக இப்பேரணி நடைபெறுகிறது.

பேரணியின் இறுதியில் எதிர்வரும் வியாழனன்று கொழும்பு லிப்டன் சுற்றுவட்டத்தில் ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தப்படும்.

# பொற்பதியில் முகாம் அமைப்பதில் படையினர் தொடர்ந்து தீவிரம்

## பல்கலை மாணவரிடம் அப்பகுதி மக்கள் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஓக.26

வடமராட்சி குடத்தனை கிழக்கு, பொற்பதிப் பகுதியில் முகாம் அமைப்பதில் படையினர் தொடர்ந்து தீவிரம் காட்டி வருகின்றனர். இது தொடர்பாக அவர்கள் எம்மையும் மிரட்டி வருகின்றனர்.

தம்மைச் சந்தித்த சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையினரிடமும் யாழ்.பல்கலைக்கழக மாணவர்களிடமும் பொற்பதிப் பகுதி மக்கள் இவ்வாறு தெரிவித்துள்ளனர் என சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

சுமார் 200 மீனவ குடும்பங்கள் வசிக்கும் பொற்பதி கிராமத்தைச் சூழ முகாம் அமைக்கப் படையினர் முயற்சி எடுத்தனர். எனினும், அப்பகுதி மீனவர்சங்கம் இதுபற்றி மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கும் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கும் அறிவித்ததை அடுத்து முகாம அமைக்கும் பணிகள் தற்போது இடைநிறுத்தப்பட்டுள்ளன. ஆனால், படையினர் அப்பகுதியில் முகாம் அமைக்கப்போவதாக பொதுமக்களை மிரட்டி வருகின்றனர்.

இந்த முகாம் அமைக்கப்பட்டால் தமது அன்றாட பணிகள் பாதிப்படையும் என்றும் பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.

யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் இங்கு வந்து படையினருடன் நீண்ட நேரம் கதைத்து விட்டு முகாம் அமைப்பதை நியாயப்படுத்தி கருத்துக் கூறிவிட்டுச் சென்றுவிட்டனர்.

கண்காணிப்புக் குழுவினரின் இந்த கருத்து, மக்கள் மத்தியில் பெரும் அதிருப்தி நிலையைத் தோற்றுவித்துள்ளது.

எக்காரணம் கொண்டும் தமது கிராமத்தைச் சூழ முகாம் அமைப்பதை அனுமதிக்கப் போவதில்லை என்றும அதற்கு எதிராகத் தமது எதிர்ப்பினைக் காட்டுவோம் என்றும் பொது மக்கள் தெரிவித்துள்ளனர் என்று அதில் உள்ளது. (எ-10)

# இளவாலை ஆலயத்தில விநாயகர் சிலை திருட்டு

சண்டிலிப்பாய்,ஓக.26

இளவாலை வடக்கு ஆனைவிழுந்தான் பிள்ளையார் ஆலயத்தில் இருந்த பிள்ளையார் விக்கிரகம் பகல்வேளையில் திருட்டுப்போயுள்ளது.

ஆலயத்தின் கொடிக்கம்பத்திற்கு, பக்கத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டிருந்த கருங்கல்லினால் உருவாக்கப்பட்ட பிள்ளையார் விக்கிரகமே இவ்வாறு திருட்டுப்போயுள்ளது.

கடந்த 18ஆம் திகதி காலைப் பூசை முடிந்தவுடன் பூசகரும் வழிபாடு செய்ய வந்தவர்களும் சென்ற பின்னர் முற்பகல் 10 மணியளவில் கறுப்பு நிற மோட்டார் சைக்கிள் ஒன்றில் வந்தவர்கள் அவ்விடத்தில் நடமாடியதாக தமக்கு தகவல் கிடைத்துள்ளது என்றும் -

இவர்களே இத்திருட்டை மேற்கொண்டிருக்கலாம் என சந்தேசிக்கப்படுகின்றது என்றும் -

ஆலய பரிபாலன சபையின் தலைவர் பா.தர்மபாலா இதுபற்றித் தகவல் தருகையில் தெரிவித்தார்.

இத்திருட்டுச் சம்பவம் பற்றி இளவாலை பொலீஸ் நிலையத்தில் ஆலய பரிபாலன சபையினர் முறைப்பாடு செய்துள்ளனர்.

பொலீஸார் ஆலயத்திற்கு வருகை தந்து விசாரணை மேற்கொண்டனர். ஆலயங்களில் விக்கிரங்களை திருடிவிற்கும் கோஷ்டியினரின் கைவரிசையாக இது இருக்கலாம் என்று சந்தேகம் தெரிவிக்கப்படுகின்றது. (எ-135)

### வைத்திய அதிகாரிக்கு விடுதி

வட்டுக்கோட்டை அரசினர் கிராமிய வைத்தியசாலையில் நீப் (Neerp) திட்டத்தின் கீழ் 20 லட்சம் ரூபா செலவில் வைத்திய அதிகாரிக்கான விடுதி ஒன்று விரைவில் நிர்மாணிக்கப்படவுள்ளது. (10-135)




கிளிநொச்சி மாவட்ட ஆஸ்பத்திரிக்கு ஒரு தொகுதி மருத்துவ உபகரணங்கள் அண்மையில் அன்பளிப்புச் செய்யப்பட்டன. இதுதொடர்பாக இடம் பெற்ற நிகழ்வில் எடுக்கப்பட்ட படம் இது. ஓ.பி.ஏ.எல். அமைப்பின் உதவியுடன் கொழும்பு இனர் லயன்ஸ் கழகம் இதனை வழங்கியிருந்தது.

## தென்மராட்சியில் விவசாயத்துக்கு அனுமதிக்கப்பட்ட பகுதியில்

# கண்ணிகளை அகற்ற அனுமதிக்குமாறு அரச அதிபர் படைத்தரப்பிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஓக.26

தென்மராட்சி தெற்குப் பகுதியில் உயர்பாதுகாப்பு வலயப் பகுதிக்குள் படையினரால் அண்மையில் விவசாய செய்கைக்கு அனுமதிக்கப்பட்ட இடங்களில் இருந்து கண்ணி வெடிகளை அகற்ற அனுமதிக்குமாறு யாழ். அரச அதிபர், யாழ்.மாவட்ட படைத்தளபதியிடம் கோரியுள்ளார்.

தனங்களப்பு, மறவன்புலோ, கைதடி - நாவற்குழி பகுதிகளில் ஆயிரம் ஏக்கர் வயல் நிலத்தில் இவ்வருட காலபோக செய்கை மேற்கொள்ள படையினரால் அனுமதிக்கப்பட்டுள்ளது.

அதியுயர் பாதுகாப்பு வலயத்துக்குள் உள்ள இந்தப் பகுதிக்குள் இனனும் கண்ணிவெடிகள் அகற்றப்படவில்லை. இதனால், அனுமதிக்கப்பட்ட வயல் நிலங்களில் பெரும்போகச் செய்கைக்கான ஏற்பாடுகளைச் செய்ய முடியாத நிலையில் விவசாயிகள் உள்ளனர்.

எனவே, கண்ணிகளை அகற்றி விவசாயச் செய்கைக்கு உதவுமாறு இப்பகுதி விவசாயிகள் அரச அதிபரிடமும் வடபகுதி இராணுவத் தளபதியிடமும் மகஜர்கள் மூலம் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இதனைத் தொடர்ந்து கண்ணிகளை அகற்ற அனுமதி வழங்குமாறு அரச அதிபர், யாழ்.மாவட்ட இராணுவத் தளபதியிடம் கேட்டுள்ளார். அனுமதி கிடைத்ததும் 'ஹலோ ரஸ்ட்' நிறுவனம் இந்தப் பகுதியில் கண்ணிகளை அகற்றும் நடவடிக்கையில் ஈடுபடும் என்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை -

அனுமதிக்கப்பட்டுள்ள பகுதிக்கு விவசாயிகள் செல்வதற்கு மூன்று பாதைகளை அனுமதிப்பதற்கும் படையினர் இணங்கியுள்ளனர். (ம)

# கட்சி ரீதியான அதிகார வெறியை முன்வைக்கும் பேரினவாதக் கட்சிகள்!

## தமிழர் பிரச்சினை தீர ஒருங்கிணைந்த முயற்சியில் அக்கறை இல்லை

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி-லங்கா சமசமாஜக் கட்சி-இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி ஆகியவற்றின் கூட்டில் உருவானது பொதுஜன ஐக்கிய முன்னணி.

இதன் மூலக் கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சிங்களம் மட்டும் ஆட்சி மொழிச் சட்டத்தோடு இனப் பிரச்சினையை ஆரம்பித்தது.

ஆனால், முதலில் சமாதானப் பேச்சை ஆரம்பித்து பண்டா-செல்வா ஒப்பந்தம் என்ற தீர்வை ஒப்புக்கொண்ட கட்சியும் அதுதான்.

ஆனால், ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க தனது ஆட்சியில் தரப்படுத்தல் என்ற மோசமான அளவுகோலை நீட்டி வடக்கு - கிழக்கின கல்விக்கு வேட்டு வைத்தார்.

இவர் காலத்தில் யாழ்ப்பாணத்தில் நடந்த உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு குழப்பியடிக்கப்பட்டு, உயிர்ச் சேதங்கள் ஏற்படுத்தப்பட்டன.

ஆயினும், 1972 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட அரசமைப்புச் சட்டத்தில் தமிழரசுக்கட்சி முன்வைத்த குறைந்தபட்சக் கோரிக்கைகளை அரசமைப்பில் சேர்க்கும் படி ஸ்ரீமாவோ கூறினார்.

ஆயினும், கொல்வின் ஆர்.டி சில்வா அதனை தட்டிக்கழித்தார்.

சோல்பரி அரசியல் திட்டம் மூலம சிறுபான்மையினரின் பாதுகாப்புக்கென வழங்கப்பட்ட 29ஆவது விதியை மாற்றியே புதிய அரசமைப்புச் சட்டம் கொண்டுவரப்பட்டது.

சிறுபான்மையினரை அரசியல் ரீதியாக இரண்டாம் தரப் பிரஜைகளாக்கியது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி.

ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆகியவற்றின் அணுகுமுறையை விட பொதுஜன ஐக்கிய முன்னணி என்ற பெயரில் இயங்கிய அணி ஓர் அணுகுமுறையோடு அரசியலில் கால் பதித்தது.

இந்த நாட்டில் வாழும் தமிழர்களுக்குப் பிரச்சினை உண்டு என்று ஏற்றுக்கொண்டு அதைப் பகிரங்கமாக ஒப்புக்கொண்ட முதலாவது சிங்களத தலைவி சந்திரிகாவே.

### நல்லாட்சிக்கு வழி

சமாதானம் மூலமே நாட்டில் நல்லாட்சி செய்ய முடியும் என்று ஊருக்கும் உலகிற்கும் கூறியவரும் அவரே தான்.

பின்னர் அவர் ஆட்சியைப் பிடித்ததும் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பித்தார். யார் செய்த பாவமோ சமாதானம் சறுக்கியது - சண்டைமூண்டது - பாரிய அழிவுகளில் நாட்டைத் தள்ளிவிட்டு - ஆட்சியை இழந்தது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி 1972ஆம் ஆண்டில் கொண்டுவந்த அரசியல் யாப்பும் ஐ.தே.கட்சியால் அறிமுகம் செய்யப்பட்ட 1978 ஆம் ஆண்டு அரசியல் யாப்பும் ஒற்றையாட்சியையும் - பௌத்த சமயத்தையுமே வலியுறுத்தின.

ஆனால், பொதுஜன ஐக்கிய முன்னணியால் அறிமுகம் செய்யப்பட்ட உத்தேச அரசியல் யாப்பு சற்று வேறுபாடாக இருந்தது. உத்தேச அரசியல் யாப்பின் நகல்திட்டத்தின்படி முதலாம் அத்தியாயத்தில் முதலாம் சரத்து இவ்வாறு அமைந்தது.

"இலங்கை ஐக்கியமும் இறைமையும் கொண்ட குடியரசாகும் இலங்கைக் குடியரசு கலைக்க முடியாத பிராந்தியங்களின் ஒன்றியமாக இருக்க வேண்டும்.

ஜனாதிபதி முறை ஒழிக்கப்பட்டு, நாடாளுமன்றத்திற்குப் பொறுப்புக் கூறக் கடமைப்பட்ட அமைச்சர்களைக் கொண்ட அரசாங்க முறை ஸ்தாபிககப்படும். அதன் மூலம் ஜனாதிபதி பெயரளவில் ஒரு நிருவாகி, என்ற நிலையினைப் பெறுவார்.

இவ்வாறு அந்தச் சரத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

### ஒன்றிய ஆட்சி முறை

ஒற்றையாட்சிக்கும் இணைப்பாட்சிக்கும் இடைப்பட்ட ஆட்சி முறையே ஒன்றிய ஆட்சி முறையாகும்.

அதிமேலான சட்டத்துணை அதிகாரத்தைப் பிரயோகிக்கும் ஒரு மத்திய அரசின் கீழ் அரசாங்கத்தின் அதிகாரம் அமைந்திருப்பின் அவ்வாறான அரசியல் யாப்பு "ஒற்றை ஆட்சி அரசியல் யாப்பு" என அழைக்கப்படும் என்று பேராசிரியர் கலெயார் பெலி கூறுகிறார்.

ஆனால், இணைப்பாட்சியின் நிலை அதுவல்ல. இணைப்பாட்சி முறையில் அதிகாரம் மத்திய தேசிய அரசுக்கும் பிரதேச அரசுகளுக்கும் இடையில் பிரிக்க முடியாதிருக்கும். மத்திய அரசும் பிரதேச அரசுகளும் ஒன்றுக்கொன்று சமமானவை ஆகும். ஒன்று பிறிதொன்றுக்குக் கீழ்படாது. ஒன்றிய அரசும் இணைப்பாட்சியைப்போன்று பல அரசுகளின் ஒன்றியமாகும்.

**பூ.ம.செல்லத்துரை**

அதனால், இணைப்பாட்சிப் பண்புகள் காணப்படுகின்றன. ஆனால், இணைப்பாட்சி முறையை விட ஒன்றிய ஆட்சிமுறையில் அவசரகால நிலையில் பிராந்திய அரசுகளின் அதிகாரத்திற்குட்பட்ட விடயங்களை மத்திய அரசு பொறுப்பு ஏற்கக்கூடிய நிலை புகுத்தப்பட்டுள்ளது. இந்நிலையைத் தவிர்த்தால் ஒன்றிய 'ஆட்சியில் ஆபத்தில்லை.

இலங்கை அரசியலில் இனப்பிரச்சினையை இணக்கமாகத் தீர்ப்பதற்கு உரிய வழி - சிறந்த அணுகுமுறை இணைப்பாட்சிதான்.

இந்த இணைப்பாட்சி சொற்பிரயோகம் சிங்கள மக்கள் மத்தியில் ஆர்வத்தை ஏற்படுத்தக் கூடியதாகும்.

தமிழரை விட அதைச் சிங்களவரே கூடுதலாக நேசித்தார்கள். டொனமூர் அரசியல் விசாரணை சபையிலும் அவர்களே முன்மொழிந்தார்கள்.

வேற்றுமையில் ஒற்றுமைகாணும் அந்த அரசியல் திட்டத்தின் உண்மையான கருத்தை அடியோடு மாற்றி - பிரிவினை என்ற விஷக் கருத்தை ஆழப்பதித்து சிங்களவரிடையே நீறு பூத்தநெருப்பாக்கியுள்ளார்கள்.

எனவே, இணைப்பாட்சி என்ற சொல் சிங்களவரிடையே இணையாத மனத்தை ஏற்படுத்தியுள்ளது.

### அதிகார வெறியே முக்கியம்

அதுமட்டுமல்ல, சிங்கள அரசியல் கட்சிகளைச் சேர்ந்தோர் நாட்டையும் மக்களையும் நேசிக்கவில்லை. தங்கள் தங்கள் கட்சியின் அதிகார வெறியை மட்டுமே முன்னெடுக்கிறார்கள்.

இருவேறு சந்தர்ப்பங்களில் நாட்டை ஆண்ட இருகட்சிகளும் இணைந்து கருத்தொருமித்த முடிவுகளை எடுக்கவில்லை.

ஐ.தே.கட்சி ஆட்சிக்காலத்தில் மங்கள முனசிங்கா தலைமையில் நாடாளுமன்றக் குழு எடுத்த ஏகமனதான தீர்வை ஐ.தே.கட்சி கருவிலேயே அழித்தது.

அடுத்து பொ.ஐ.முன்னணியின் ஆட்சியின் போது சந்திரிகா, "பிராந்தியங்களில் ஒன்றியம்" என்ற அரசியல் யாப்பு நகலை முன்மொழிந்தார். அதை வெளிப்படையாகவே எதிர்த்து - தீக்கிரையாக்கியது ஐ.தே. கட்சியாகும்.

எனவே, பொதுஜன ஐக்கிய முன்னணியினர் சந்தர்ப்ப சூழலால் தப்பான - தவறான கோணத்தில் சமாதானப் பேச்சைத் திசை திருப்பி பிழையான அணுகுமுறையைப் பயனபடுத்தி, சண்டைமூலம் சமாதானம் காணும் புதிய சித்தாந்தத்தை வரலாற்றில் பதிய முயன்று வரலாற்றையே தொலைத்து ஏங்குகிறார்கள்.

சண்டையை எவ்வளவோ மும்முரமாக நடத்திய சந்திரிகாவே - சமாதானத்தின் தேவையை உள்நாட்டிலும உலக அரங்கிலும் பதித்தார் என்பதை மறக்க முடியாது.

பிரித்தானிய உதவி அமைச்சரான இயன்சிமித்தின் மூலம் - ஐ.தே. கட்சியினரோடு புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துகொண்டுதான், இரு கட்சிகளும் இணைந்து ஏகமனதாக ஏற்றுக்கொண்ட முடிவையே 'பிரதேசங்களின ஒன்றியம்' என்ற தலைப்பில் புதிய அரசியல் யாப்பாக நாடாளுமன்றத்தில் முன்வைத்தார் சந்திரிகா.

### தீயிட்டுக் கொளுத்தியவர்கள்

ஒத்துக்கொண்ட தீர்வையே தீயிட்டுக் கொளுத்திய ஐ.தே. கவினர், அதைவிட வேறு எதைத் தான் தரப்போகிறார்கள்?

நாடாளுமன்றத்தில் அறுதிப் பெரும்பான்மையும் - சர்வநிறைவேற்று அதிகாரமுமில்லாதவர்கள் எவ்வாறு விடுதலைப் புலிகள் எதிர்பார்க்கும் இடைக்கால அரசைத் தரப்போகிறார்கள்?

அரசியல் யாப்புக்கு அப்பாற்பட்டே புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டது. அது சரியானால் அந்த அடிப்படையில் இடைக்கால அரசை வழஙகுவதில் அரசுக்கு தயக்கம் ஏன்? மயக்கம் ஏன்? தாமதம் ஏன்?

பயத்தினால் யானை அடிக்கும்-பாம்பு கடிக்கும் - பயத்தால் விளைந்ததே - பொதுஜன ஐக்கிய முன்னணியின் சீற்றம்.

சினத்தின் பெறுபேறு சீரழிவு. இதை நாடு கண்டு நடுங்குகிறது.

1983 ஆம் ஆண்டு ஐ.தே.கட்சி ஆட்சியே திட்ட[illegible] ஜூலை கலவரத்தை நடத்[illegible] நாடு கடத்தியது. [illegible]லைத்துப் பேசுகிறோம்.

அவ்வாறு [illegible]பொதுஜன ஐக்கிய முன்னணிக்கும் ஒரு சந்தர்ப்பத்தைக கொடுத்துப்பார்த்தால் என்ன என்ற அரசியல் ஆய்வாளர்களின் கேள்வி அழுத்தமும் பொருத்தமும் மிக்கதாகும்.

வெறும் வாயைமென்று காலத்தை வீணாக்குவதை விட அவலையும் சேர்த்து மென்று பார்ப்பதில் தவறில்லை.

அரசியலில் நீடித்த நண்பரும் இல்லை. நிலைத்து நின்ற எதிரியும் இல்லை.

கையில் வெண்ணெயை வைத்துக் கொண்டு நெய்க்கு அலைவதைவிட -வெண்ணெய் திரண்டு வரும் போது தாழியை உடையாது-நெய்எடுப்பதே சிறந்த சாணக்கியமாகும்.



## "தேரேறி வரும் நல்லூர்க் கந்தா"

மேன்மைகொள் சைவநீதி விளங்குக
உலகமெல்லாம்

அவுஜா ஒலிபெருக்கி சாதனங்கள் விற்பனையாளர்
**"கோபுரம் சவுண்ட்ஸ்"**

M. மயூரன்
மஞ்சவனப்பதி வீதி, கோக்குவில் மேற்கு, கோக்குவில்.
**KOPURAM SOUNDS.**

(21470)

## வெளிவருகின்றது

**VCD SONG**
ப்ரியமான தோழி
காதல் கொண்டேன்
ஜெயம)

**AUDIO CD**
உள்ளம் கேட்குமே
தென்னவன்
ஜெயம்

**95 ரூபா மட்டுமே!**

வியாபாரிகளுக்கு விசேட கழிவுண்டு.
**மூர்த்தி வீடியோ & எலெக்ரோனிக்**
மானிப்பாய்.
T.P. - 021 2884

(21-15-19) (21840)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



**திரு.கந்தையா கணேசதாஸ்**
அளவெட்டி வடக்கு
J/215 கிராம சேவையாளா

திரு.கந்தையா கணேசதாஸ் அவர்கள் கிராம சேவையாளர் தரம் Iஇல் நியமனம் பெற்றதையிட்டு இவரை வாழ்த்துவதோடு, இவரின் சேவை மென்மேலும் வளரவும், பல்லாண்டு காலம் வாழவும் வாழ்த்துகின்றோம்.

**- நண்பர்கள்.**

சுன்னாகம் (c/29767) (25-12-21)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 20 - 10 - 1971 | 27 - 07 - 2003 |



**மகாலிங்கம் சந்திரலிங்கம் (கண்ணன்)**

ஒரு திங்கள் சென்றதையா!
உனையிழந்து எவரறிவார்
நாம் படும் வேதனை?
மூத்தவனாய் வந்துதித்து
முந்தியே மறைந்ததனால்
நித்தமும் கண்ணீர வடிக்கின்றோம்.

அறிவாலயம்,
கரணவாய் தெற்கு.

**- குடும்பத்தினர்.**

(21801) (21-19-15)

## விற்பனைக்கு

தச்சுவேலை செய்யும் சைனா மெசின்கள் 10", 12", 14", 16" ஆகியனவும் மின்சார ரில்லர்கள், அலுமினிய கட்டிங் மெசின், டிசைன் சீவும் றவுட்டர்கள், ஜெனரேட்டர்கள், வெல்டிங் பிளான்ற், இவற்றிற்கான உதிரிப்பாகங்களும் வேறு வகை மின்சார சாதனங்களும் விற்பனைக்குண்டு.

தொடர்பு:
**கி.சுதாகரன்**
இல.20, இரண்டாம் ஒழுங்கை,
அரசடி வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம்.

(சி-29776) (21-15-19)

## மரண அறிவித்தல்

### தம்பு சிவவடிவேல்

(ஓய்வுபெற்ற சிறைச்சாலை உத்தியோகத்தர்)

சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பு சிவவடிவேல் 24.08.2003 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பு - சடைச்சி ஆகியோரின் அன்பு மகனும் சின்னத்தம்பி - பாக்கியம் அவர்களின் அன்பு மருமகனும் சறோஜாதேவியின் அன்புக் கணவரும் சுகந்தி, ஜெகரூபன்(கனடா), ஜெகந்தி, சுதர்ணன் (சுவிஸ்), காந்தரூபன் (கிளிநொச்சி), தமயந்தி, காண்டீபன், நிஷாந்தி(சாவகச்சேரி) ஆகியோரின அன்புத் தந்தையும் வசீகரன், காபீம், ஜெயசீலன் ஆகியோரின் அன்பு மாமனாரும் காரீஸ், ஜதீன், வேணிஜா, தனுஸ்ராஜ் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விரம் பின்னர் அறிவிக்கப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
காந்தன் (மகன்)

*தாமோதரம்பிள்ளை வீதி,*
*சங்கத்தானை, சாவகச்சேரி.*
(21836) (25-12-21)


**Browns**
*Electronics*
வாழ்வில் அதியுயர் மகிழ்ச்சி!
**Quality இலாபம்**

நம்பமுடியாத விலைகளில் உலகத்தரமிக்க உன்னதச் சாதனங்கள்



**SHARP**
14 அங்குல தொலைகாட்சிப் பெட்டி வாங்கினால்...
5 வருட உத்தரவாதம்



**Cornell** பிளெண்டர் இலவசம்



**SHARP**
20/21/29 அங்குல தொலைகாட்சிப் பெட்டி வாங்கினால்...
5 வருட உத்தரவாதம்



**Moulinex** டோஸ்டர் இலவசம்

**SHARP**
ES-60W
சலவை இயந்திரம்



ரூ.1000/- சேமியுங்கள்



**SHARP**
SJK-21P
குளிர்சாதனப்பெட்டி
ரூ.2500/- சேமியுங்கள்
5 வருட உத்தரவாதம்



**ELBA**
EFSA 801
சலவை இயந்திரம் வாங்கினால்...



**ELBA**
ஸ்டீமர் அயன்
இலவசம்



**Sumeet**
DM 200
பிளெண்டர்
ரூ. 650/- சேமியுங்கள்



**SHARP**
WF-2100W
கசட் ரெக்கோடர்
ரூ.1000/- சேமியுங்கள்

ஹட்டன் நஷனல் ததாதருவ
பிறவுன்ஸ் உற்பத்திகளுக்கு இலகு தவணைக் கொடுப்பனவு ஒழுங்குசெய்து கொடுக்கப்படும்

பிறவுன்ஸ் உத்தரவாதப் பத்திரத்தை கேட்டுப்பெறுங்கள்

BROWNS GROUP BG ESTD 1875
**Browns**
Group of Companies

89, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021-2225150

*இச்சலுகை கையிருப்பு உள்ளவரை மட்டுமே!*

TNT Grafix





ஆறுதல் தந்துள்ள அமைதிப் பேச்சு மீண்டும் தொடர்ந்து பூரணவெற்றிபெற வேண்டி, நாட்டுமக்கள் அனைவரும் நலம்பெற இன்று தேருலாவரும் நல்லூரானை நாடி நிற்கும்......

**சிவகணேசன் ரெக்ஸ்ரைல்**

இல. 41, பெரிய கடை, யாழ்ப்பாணம்.

யாழ். நகரில்.... மக்கள் போற்றும் மகத்தான ஜவுளிகளின் சாம்ராஜ்யம்!
ஆடவர். மகளிர் அனைவருக்குமான அனைத்துரக ஆடைவகைகளையும் உங்கள் எண்ணம் போல.
வண்ணம் வண்ணமாகத் தெரிவுசெய்திட இன்றே நாடுங்கள்..... சிவகணேசன் ரெக்ஸ்ரைல்

(C/29705) (12-14)

UTHAYAN Graphics

உதயன்

## இடைக்கால நிர்வாகம்: உண்மை நிலை விளக்கம்

மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) தேசாபிமான வேஷம் போட்டுக்கொண்டு நாட்டின் பல பகுதிகளிலும் வடக்கு - கிழக்கு இடைக்கால நிர்வாகத்துக்கு எதிராக இனவாதத்தைக் கக்கி வருகிறது.

இடைக்கால நிர்வாகம் சம்பந்தமாகக் கூறப்படும் முக்கிய குற்றச்சாட்டுக்கள் இரண்டு. அவை வருமாறு:-

✪ இடைக்கால நிர்வாகம் தனித்தமிழ் ஈழத்துக்கு இடமளித்துவிடும்.

✪ விடுதலைப் புலிகளிடம் வடக்கு - கிழக்கு இடைக்கால நிர்வாகத்தைக் கையளித்தால் அங்குள்ள ஏனைய சமூகங்களும் பிரதேசங்களும் பாதிப்படையும்.

இந்தக் குற்றச்சாட்டுகளுக்கு முன்னாள் யாழ். மாநகர ஆணையாளர் சி.வீ.கே.சிவஞானம் ஆணித்தரமாகப் பதில் அளித்திருக்கிறார். அதுமட்டுமல்லாமல், இன்றைய சூழ்நிலையில் இடைக்கால நிர்வாகத்தின் அவசியத்தேவையையும் அவர் வலியுறுத்தியிருக்கிறார்.

ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்த்தன தனது ஆட்சிக்காலத்தில் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை அடுத்து புலிகளுக்கு வடக்கு - கிழக்கு இடைக்கால நிர்வாகத்தை வழங்க நடவடிக்கை எடுத்தபோது அந்த நிர்வாகத்தின் தலைவராக விடுதலைப் புலிகளால் நியமிக்கப்பட்டவர் சி.வீ.கே.சிவஞானம். அதனால் இடைக்கால நிர்வாகம் பற்றிக் கருத்துத் தெரிவிப்பதற்குத் தகுதி வாய்ந்தவர் அவர்.

சமீபத்தில் தேசிய எழுச்சிப் பேரவையின் யாழ். மாவட்ட பேராளர் மாநாடு பளையில் நடைபெற்றபோது அதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தார் சிவஞானம். அவர் கூறியவற்றின் சாரம் வருமாறு:-

இடைக்கால நிர்வாகம் ஒன்றும் புதிய விடயமல்ல. 1987 ஆம் ஆண்டு இந்திய - இலங்கை ஒப்பந்தத்தைத் தொடர்ந்து செப்ரெம்பர் 29 ஆம் திகதி அப்போதைய ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்த்தனவால் உருவாக்கப்பட்டு, பிரகடனப்படுத்தப்பட்ட முன்னுதாரணம் கொண்டதே இடைக்கால நிர்வாகம். இன்றைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அப்போதைய அமைச்சரவையில் ஓர் உறுப்பினராக இருந்தவர்.

எனவே, இடைக்கால நிர்வாகம் அரசமைப்புக்கு முரணானது; புறம்பானது என்று கூறிக்கொண்டு இந்தக் கோரிக்கையை நிராகரிக்கவோ, இழுத்தடிக்கவோ முடியாது. இந்த அரசமைப்பை உருவாக்கியவரே ஜே.ஆர். தான்.

இடைக்கால நிர்வாகம் தனித் தமிழீழத்துக்கு இடமளித்துவிடும் அல்லது அதற்கு சமமானது என்ற இனவாதிகளின் வாதம் அர்த்தமற்றதாகும்.

விடுதலைப் புலிகள் அமைப்பு பலமான நிலையில் நின்றுகொண்டு தமிழீழத்தின் பாரிய நிலப்பரப்பைத் தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்துக்கொண்டபோதும் கூட, தனிநாட்டுக் கோரிக்கைக்குப் பதிலாக ஓர் அர்த்தமுள்ள சமஷ்டி அமைப்பு முறையைப் பரிசீலிக்கத் தயார் எனத் தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் தெரிவித்தார். அப்படியிருந்தும் இடைக்கால நிர்வாகம் தனிநாட்டுக்குச் சமன் என்று கூறப்படுவது விதண்டாவாதமும், சமாதான விரோதமானதுமாகும்.

விடுதலைப் புலிகளிடம் வடக்கு - கிழக்கு அரச நிர்வாகத்தைக் கையளித்தால் இங்கு ஏனைய சமூகங்களும் பிரதேசங்களும் பாதிப்படையும் என்ற ஒரு கருத்து சில கோணங்களிலிருந்து முன்வைக்கப்படுகிறது. இது முற்றிலும் தவறானது என்பதை 1987 ஆம் ஆண்டின் இடைக்கால நிர்வாகசபை அமைப்பு தெளிவாகக் காட்டும்.

விடுதலைப் புலிகள் சார்பாக ஏழு பேரில் மூவர் வட பகுதியிலிருந்தும், ஒருவர் திருகோணமலையில் இருந்தும் இருவர் மட்டக்களப்பில் இருந்தும் ஒருவர் கல்முனையிலிருந்தும் நியமிக்கப்பட்டனர். கல்முனையைப் பிரதிநிதித்துவப்படுத்தியவர் ஆதம்லெவ்வை என்ற முஸ்லிம் நபர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆயுதப்போராட்டம் நடைபெற்ற பலநாடுகளில் இடைக்கால நிர்வாக அமைப்பு ஏற்படுத்தப்பட்ட பின்பே நிரந்தரத்தீர்வு எட்டப்பட்டுள்ளது.

ஆப்கானிஸ்தான், கொங்கோ மற்றும் ஈராக் போன்ற நாடுகளின் இடைக்கால நிர்வாகங்கள் உதாரணங்களாகும். இவையெல்லாம் அந்தந்த நாட்டு அரசமைப்புச் சட்டங்களின் கீழ் அமைக்கப்பட்டவையல்ல. சூழ்நிலைக்கும், தேவைக்கும் ஏற்ப நாட்டு நலன்கருதி ஏற்படுத்தப்பட்டவை. அவ்வாறான செயற்பாடே இங்கும் தேவை.

இடைக்கால நிர்வாக ஏற்பாட்டை விடுதலைப் புலிகள் இயக்கம் பேச்சுக்களின் ஆரம்பத்திலோ அல்லது ஆறு சுற்றுப் பேச்சு நடைபெறும் வரையிலோ கோரவில்லை. பேச்சுக்கள் மூலம் ஏற்படுத்தப்பட்ட 'சிரான்' அமைப்பு போன்றவை செயற்படமுடியாமல் போனதும், மக்களின் இயல்பு வாழ்க்கை திரும்பாததும், மீள்குடியமர்வு இடம் பெறாததுமே முக்கிய காரணங்கள் ஆகும். இந்தக் கோரிக்கையை முன்வைத்து வலியுறுத்த வேண்டிய சூழ்நிலைக்கு விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தள்ளியது இந்த அரசின் தடுமாற்றமான அணுகுமுறையே என்பதைச் சுட்டிக்காட்ட வேண்டும்.

இந்தக் கோரிக்கையை நாம் மட்டுமல்லாது, சர்வதேச சமூகமும் ஏற்றுக்கொண்டுள்ளது. எனவே, தாமதமின்றி இடைக்கால நிர்வாகத்தை தமிழீழ விடுதலைப் புலிகளிடம் கையளித்து சமாதானப் பேச்சுக்களைத் தொடர வேண்டும் என ஸ்ரீலங்கா அரசை வேண்டுகின்றோம். இந்த நடவடிக்கைக்கு வேண்டிய ஆதரவையும் ஆலோசனையையும் வழங்குமாறு சர்வதேச சமூகத்தையும் வேண்டி நிற்கின்றோம். இப்படி சி.வீ.கே. சிவஞானம் கூறினார்.

அனைவரும் கவனத்தில் கொள்ள வேண்டிய கருத்துக்கள் இவை.

# சேது சமுத்திரத் திட்டத்துடன் இணைந்து இராமேஸ்வரம் - தலைமன்னார் பாலம்

## செயற்படுத்தலாம் என சென்னையில் பிரதமர் உரை

சென்னை,ஓக.26

இலங்கை - இந்தியா இடையே பொருளாதார உறவு உள்ளிட்ட உறவுகள் மேம்பட, புத்துயிர்பெற இராமேஸ்வரம் - தலைமன்னார் இடையே தரைப்பாலம் அமைக்க வேண்டும் என்று பிரதமர் ரணில விக்கிரமசிங்க தமிழகத்தில் வலியுறுத்தியுள்ளார்.

சேது சமுத்திர திட்டத்துடன் இணைத்து இந்தத் திட்டத்தையும் செயற்படுத்தலாம் என்றும் அவர் கூறினார்.

எம்எஸ்சுவாமிநாதன் ஆராய்ச்சி பவுன்டேஷன் சார்பில் சென்னையில் சனிக்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியில் 'நம் மக்களைச் செல்வந்தர் ஆக்குவோம்' என்ற தலைப்பில் அவர் மில்லேனியம் சொற்பொழிவாற்றினார்.

இருநாடுகளையும் இணைக்கும் வகையில் தமிழ்நாட்டின் இராமேஸ்வரத்துக்கும், இலங்கையின் தலைமன்னாருக்கும் இடையே தரைப் பாலம் அமைக்க வேண்டும்.

வீதி மற்றும் ரயில் இணைப்பு மூலம் இப்பிராந்தியத்தின் பொருளாதாரங்கள் ஒருங்கிணையும் அதேநேரத்தில் சேது சமுத்திர திட்டத்தையும் செயற்படுத்தலாம். இரு திட்டங்களையும் ஒரேசமயத்தில் செயற்படுத்த முடியும்.

இவற்றின் மூலம் இரு நாடுகளுக்கும் இடையே கடல்வழிப் பாதையுடன், வீதி ரயில் பாதைகளும் ஏற்பட வாய்ப்புக் கிடைக்கும்.

கடல்வழிப் போக்குவரத்தைவிட வீதி வழி போக்குவரத்தே சிறந்ததாகும். மிகக் குறைந்த நேரத்தில் பொருள்களை ஓர் இடத்திலிருந்து மற்றோர் இடத்துக்கு எடுத்துச் செல்ல முடியும். தமிழ் நாட்டிலும், இலங்கையிலும் துறைமுகங்கள் இருப்பதால் சர்வதேச வர்த்தகத்தை அதிகளவில் ஈர்க்க முடியும்.

தரைப்பாலம் அமைப்பதால் பொருளாதார நடவடிக்கைகள் மேம்படும். அதன் மூலம் பலருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். இதனால், இரு நாடுகளுக்குமே பலன் கிடைக்கும்.

கடந்த 50 ஆண்டுகளாக இந்தியா, இலங்கை இடையே வர்த்தகக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டிருந்தது. எங்கள் நாட்டு மக்கள் பணக்காரர்கள் ஆகாததற்கு இதுவும் ஒரு காரணமாகும்.

தற்போது இரு தரப்புக்கும் இடையே வர்த்தக உறவு மேம்பட்டு வருகிறது. கடந்த 20 ஆண்டுகளாக இலங்கையில் நடைபெற்று வரும் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்ட பிறகே தரைப்பாலம் அமைப்பது உள்ளிட்ட திட்டங்களை மேற்கொள்ள முடியும். நாளையே அமைதி ஏற்படும்; நாளையே தரைப்பாலம் அமைக்கப்படும் என்று எதிர்பார்க்கவில்லை. இருப்பினும், அதற்காக இப்போதே திட்டமிட வேண்டும்.

இந்தியா - இலங்கை இடையே, பல்வேறு துறைகளில் வர்த்தக உறவு ஏற்பட வாய்ப்புள்ளது. இவ்வர்த்தக உறவின் மூலம் இரு நாட்டின் பொருளாதாரங்களும் வளர்ச்சியடையும் அதன் மூலம் தெற்காசியாவில் இரு நாடுகளும் வலுவான பொருளாதார நாடுகளாகத் திகழமுடியும்.

இரு நாடுகளுக்குமிடையே உள்ள வர்த்தகத் தடைகள் விலக்கிக் கொள்ளப்பட்டால் சர்வதேச அளவில் சிறந்த முறையில் போட்டியிட முடியும். குறிப்பாக தென்னிந்தியாவுக்கும், இலங்கைக்கும் இடையே இருந்த வர்த்தக உறவைப் புதுப்பிக்க வேண்டும்.

தென்னிந்தியா மற்றும் இலங்கையின் இயற்கைக் சூழல்களால் சுற்றலாத் துறையில் கூட்டுறவு ஏற்பட நல்ல வாய்ப்பு உள்ளது. இருநாடுகளுக்கும் இடையே உள்ள வர்த்தகத் தடைகள் நீக்கப்பட்டால் லட்சக்கணக்கானவர்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கும். பொருளாதார நிலை மேம்படும் - என்றார் விக்கிரமசிங்க.

வேளாண் விஞ்ஞானி எம்.எஸ்.சுவாமிநாதன், இந்தியாவுக்கான இலங்கைத்தூதர் மங்கள முனசிங்க, பத்திரிகையாளர் என்.ராம், எம்.எஸ்.சுவாமிநாதன், ஆராய்ச்சி பவுன்டேஷன் செயல் இயக்குநர் பி.சி.கேசவன் ஆகியோர் இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்டனர்.

# ஈழத்தமிழ் அறிஞர்களுக்கு வருடாந்தம் பட்டங்கள் வழங்கிக் கௌரவிக்கத் திட்டம்

## திருவாவடுதுறை ஆதீன சுவாமிகள் நல்லை ஆதீனத்தில் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஓக.26

ஈழத்தில் உள்ள தமிழ் அறிஞர்களுக்கும் சைவ சித்தாந்தத் தலைவர்களுக்கும் இனிவரும் காலங்களில் வருடந்தோறும் பரிசில்களும் பட்டங்களும் வழங்கிக் கௌரவிக்கவுள்ளோம்.

- இவ்வாறு தெரிவித்தார் இந்தியாவில் இருந்து வருகை தந்த திருவாவடுதுறை ஆதீன மகாசந்நிதானம் சிவப்பிரகாச பரம தேசிக பரமாச்சார்ய சுவாமிகள்.

யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்துள்ள அவருக்கு நேற்றுக் காலை நல்லூர் ஆதீனத்தில் வரவேற்பளிக்கப்பட்டது.

நல்லூர்க் கந்தன் ஆலயத்தின் முன்பாக இருந்து சுவாமிகள இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன், நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுமாமிகள், யாழ். மாவட்ட அரச அதிபர் செ.பத்மநாதன், யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் மோகனதாஸ், பேராசிரியர் அ.சண்முகதாஸ் முதலான பிரமுகர்களால் நல்லை ஆதீனத்துக்கு அழைத்துவரப்பட்டார்.

ஆதீனத்தில் அவருக்கு சிறப்பான வரவேற்பு வழங்கப்பட்டது.

அங்கு உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஈழ நாட்டில் அழிக்கப்பட்ட ஆலயங்கள் அனைத்தும் மீளப் புனரமைக்கப்பட்டு விரைவில் கும்பாபிஷேகம் நடைபெறவேண்டும்.

இலங்கையின் பல இடங்களில் ஆலயங்கள் வழிபடமுடியாத நிலையில் இன்று இருக்கின்றன.

நீண்டகாலமாக வழிபடமுடியாது இருந்த பாடல்பெற்ற தலமான திருக்கேதீஸ்வர ஆலயத்தில் கும்பாபிஷேகம் அண்மையில் சிறப்பாக நடைபெற்றுள்ளது. அரசினதும் இந்து கலாசார அமைச்சினதும் ஒத்துழைப்புடன் அது நிகழ்ந்தேறியமை மகிழ்ச்சியைத் தருகின்றது.

வழிபாடுசெய்ய முடியாத நிலையில் உள்ள அனைத்து ஆலயங்களிலும் விரைவில் திருப்பணிகள் நடைபெற்று அங்கெல்லாம் குடமுழுக்கு நடைபெறவேண்டும் என்று நாம் இறைவனிடம் பிரார்த்திக்கின்றோம்.

சைவ சித்தாந்த ஆராய்ச்சியில் பட்டம் பெற விரும்பும் ஈழ மாணவர்கள் முறையாக விண்ணப்பித்தால் அவர்களுக்கு நாம உதவிகளை வழங்குவோம் - என்றார்.

நிகழ்வில் உரையாற்றிய துர்க்கா துரந்தரி கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தனது உரையில் தெரிவித்ததாவது:-

திருவாவடுதுறை சுவாமிகள் இங்கு எழுந்தருளியிருக்கும் இந்த அற்புத நிகழ்வினால் இந்த மண் புனிதமடைய வேண்டும். இங்கு சுவாமிகள் வந்து காட்சி தருவதும் ஆசியுரை வழங்குவதும் அற்புத நிகழ்வாகும் - என்றார். (ம-ரி)



தென்னிந்திய திருவாவடுதுறை ஆதீனத்தைச் சேர்ந்த 23 ஆவது குருமகா சந்நிதான சிவப்பிரகாசதேசிக பரமாசார்ய சுவாமிகள் நேற்று நல்லூர் ஆலய தரிசனத்துக்கு வருகைதந்த போது ஆலய முன்றிலில் வைத்து எடுக்கப்பட்ட படம் இது. இவருடன் இந்து கலாசார அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளரும் முன்னாள் மேலதிக அரச அதிபருமான து.வைத்திலிங்கம், இந்து கலாசாரத் திணைக்கள உதவிப்பணிப்பாளர் கே.குமார்வடிவேல் ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர். (படம்:வசந்தன்)

# விவசாய நிலங்களினுள் கடல்நீர் உட்புகும் அபாயம்!

## புளியங்கூடல் மக்கள் முறைப்பாடு

யாழ்ப்பாணம், ஓக.26

புளியங்கூடலில் உள்ள குறுக்குக்கடலில் தெற்குப்பகுதி வீதி மிகவும் சேதடைந்துள்ளதை அடுத்து அப்பகுதி விவசாய நிலங்களில் கடல்நீர் புகும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இந்த வீதி மிகவும் தாழ்ந்த பகுதியில் அமைந்துள்ளமையால் மழைகாலத்தில் கடல்நீர் பெருக்கெடுத்து வீதியைச் சேதப்படுத்தி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கிடையில் வீதியை மேவிப்பாயும் கடல்நீரானது விவசாய நிலங்களுக்குள் உட்புகக்கூடிய நிலை ஏற்பட்டுள்ளது என்றும் -

எனவே, இந்த வீதியைப் புனரமைக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் -

அப்பகுதி விவசாய அமைப்புக்களும் பொது அமைப்புக்களும் 'நியாப்' நிறுவனத்திடம் கோரிக்கை விடுத்துள்ளன.

'நியாப்' நிறுவனத்தினால் அப்பகுதியில் உள்ள உவர்நீர் தடுப்பணை ஒன்று புளியங்கூடல் விவசாய சம்மேளனத்தின அனுசரணையுடன் புனரமைக்கப்பட்டு வருவது தெரிந்ததே. (எ-10-49)

### நாளை

ஆவணி 10
புதன்கிழமை
(27.08.2003)
திதி : அமாவாசை
முன்னிரவு 11.47 வரை
நட்சத்திரம : ஆயிலியம்
காலை 6.18 வரை
அமாவாசை விரதம்
சுபநேரம் : 4.35 - 6.05
ராகுகாலம்: 12.05-1.35
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

தந்தையின் கோபத்துக்கு மகன் பயப்படுவதிலும பார்க்க மௌனத்துக்குத்தான பயப்படுகிறான்.

லண்டன் ஆலய உதவியுடன் தமிழர் புனர்வாழ்வுக் கழகம்

# வலுவிழந்தோருக்கு இன்று சக்கரநாற்காலி வழங்கும்

வலி.வடக்கு,ஓக.26

பிரிட்டனில் உள்ள சைவ ஆலய நிர்வாக சபையின் ஆதரவுடன் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் யாழ். மாவட்டக் கிளை வலுவிழந்தவர்களுக்கு சக்கர நாற்காலிகளை வழங்கவுள்ளது. நல்லை ஆதீன விருந்தினர் மண்டபத்தில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு இதற்கான நிகழ்வு இடம்பெறும்.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரச அதிபர் செ.பத்மநாதனும் சிறப்புவிருந்தினர்களாக தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி, யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் எஸ். சதுர்முகன், அரசசார்பற்ற இணையங்களின் தலைவர் வைத்திய கலாநிதி வை.தியாகராஜா, தமிழர் புனர்வாழ்வுக் கழக இணைப்பாளர் இனியவன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.(ம-86)



## தொக்குவில் பொற்பதி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் - 2003

விநாயகர் அடியார்களே!

சுபானு வருஷ மஹோற்சவம் நாளை (27.08.2003) புதன்கிழமை நண்பகல் 12.00 மணிக்குக் கொடி யேற்றத்துடன் ஆரம்பமாகி 10.09.2003 புதன்கிழமை தீர்த்தோற்சவத் துடன் நிறைவுபெறும்.

– ஆலய நிர்வாகஸ்தரும், உரிமையாளரும்
தியாகராஜக் குருக்கள் நடராஜசர்மா

(21839)(21-15-19)

## அம்பாள்குளத்தில் புதிய பாடசாலை

கிளிநொச்சி, அம்பாள்குளம் கிரா மத்தில் புதிய அரசினர் பாடசாலை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. புதிய பாடசாலை அமைப்பதற்கு கல்வி அமைச்சின் அங்கீகாரம் பெறும் பொருட்டு அமைச்சுக்கு கடிதம் அனுப் பப்பட்டுள்ளதாக கிளிநொச்சி வல யக் கல்வி பணிப்பாளர் ப.அரியரத் தினம் தெரிவித்துள்ளார். (எ)

## ஈவினை ஐயனார் வீதி விரைவில் புனரமைப்பு

யாழ்ப்பாணம்;ஒக.26

புன்னாலைக்கட்டுவன் - ஈவினை ஐயனார் கோவில் வீதி புனரமைக் கப்படவுள்ளது. நீண்டகாலமாக புன ரமைக்கப்படாத மண்பாதையாக காணப்பட்ட இவ்வீதி மழை காலங் களில் சேறும் சகதியுமாக காணப் படுவது குறிப்பிடத்தக்கது.

தற்போது இவ்வீதியைப் புனர மைக்கும் நோக்கில் வீதியோரத்தில் கற்கள் பறிக்கப்பட்டுள்ளன. எனி னும் ஈவினைப் பகுதியின் மையப் பகுதியில் உள்ள வீதிகள் பலவும் மிகவும் மோசமான நிலையில் கவ னிப்பாரற்று காணப்படுவதாக அவ் வூர் வாசிகள் கவலை தெரிவித் தனர். (எ-69)


20%-25% தள்ளுபடி

COSMO
டீசல் ஜெனரேட்டர்ஸ்

- 5 வர்க்கங்கள்
- 1.8KW முதல் 10KW வரை
- சப்தமற்ற வர்க்கங்கள்
- மின்சாரத்தினால் அல்லது கைகளினால் இயக்கக்கூடியவை
- எண்ணெய் குறையும் நிலையில் தானாகவே இயக்கத்தை நிறுத்திக்கொள்பவை






நம்பகமான விற்பனைக்குப் பிந்திய சேவை

மேலும் விபரங்களுக்கு:
சென்ட் அந்தனீஸ் கொன்சலிடேட்டட் லிமிட்டெட் H
516, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு -10.
தொலைபேசி: 337286, 337283-5, 324261-5

Access Graphics



கூரை அமைப்பில் புதிய அலை

அன்டன் சுபர் ஷெல்டா

குடியிருப்பு விவசாய மற்றும் வர்த்தகக் கட்டிடங்களுக்கு உகந்தவை






அன்டன் சுபர் ஷெல்டா

- 25 மிமி கனம் கொண்டது
- வேறு எந்தக் கூரைத் தகடுகளையும்விட மலிவானது
- குறைந்த வெப்பம்
- மழை நேரங்களில் குறைந்த இரைச்சல்
- துரு பிடிக்காதது
- சுகாதார இடையூறு அற்றது
- 20 வருடங்களுக்கு மேல் நீடிக்கக்கூடியது
- நிறம் மாறாதது

நீடித்த பாவனைக்கு பொருத்தும் வழிகாட்டியின்படி பொருத்துங்கள். இதனை விற்பனையாளரிடம் பெற்றுக் கொள்ள மறவாதீர்கள்.

உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்துவோர்
சென்ற் அந்தனீஸ் ரூவ்பிங் (பிரைவேட்) லிமிட்டெட்
516, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10.
தொ.பே. 324261-5, 337283-5 ஃபெக்ஸ். 446554

விநியோகஸ்தர்:
நாராயணா கட்டிடப்பொருட்கள் வர்த்தகர், 95/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

Access Graphics



மலிவு விலையில் புத்தகங்கள்

நல்லூர்க் கந்தன்
மஹோற்சவத்தை முன்னிட்டு சகலருக்கும் சகல புத்தகங்களும்

10% கழிவுடன்

★ புதிய கெம்பியூட்டர் நூல்கள்
★ இந்துசமய இலக்கியங்கள்
★ சிறுவர் கதைகள், பாடல்கள்
இன்னும் பலப்பல!

பொது அறிவு ~ திரு.வே.தபேந்திரன் B.Com.
(புதிய பதிப்பு)

ஸ்ரீலங்கா புத்தகசாலை
234, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம் (நல்லூர் சிவாலயம் முன்பாக).
தொலைபேசி: 222 2573.

(சி-29763) (21-19-15)


## 4ஆம் வருட நினைவஞ்சலி

தோற்றம் 15 - 10 - 1953



மறைவு 26 - 08 - 1999

### அமரர் நடராஜா திசைவீரசிங்கம்

நான்கு வருடமும் ஆயிற்றோ
நாங்கள் உம்மைப் பிரிந்து!
என்றும் உங்கள் நினைவோடு
இப்பூவுலகில் வாழ்கின்றோம்.

இராஜ வீதி,
சிறுப்பிட்டி மேற்கு,
நீர்வேலி.

திருமதி சத்தியபாமா (மனைவி),
செல்வி றஜீனா (மகள்),
உறவினர்கள்.

(21-19-15)(சி-29761)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

மண்ணில் 20 - 04 - 1935



விண்ணில் 27 - 07 - 2003

அரியாலையூர்

### அமரர் பொன்னம்பலம் ஆறுமுகம்

(ஓய்வுபெற்ற சிறைச்சாலைப் பாதுகாவலர்)

அன்போடும் பண்போடும்
பாசத்தோடும் பேணி வளர்த்த
உங்கள் திருமுகம் எப்போதும்
எங்கள் மனக்கண்களில் நிழலாடிக்கொண்டிருக்கும்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:

ஆ.கனகம்மா, 25/1, வைரவர் கோவில் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

(21819) (21-19-15)

## அழியா நினைவுடன் ஆறாண்டு



கப்டன் கோகிலா

### இராஜேந்திரம் மைதிலி

(வரைபடப் பிரிவு,
மாலதி படையணி)

வித்தாக 15-12-1973

விழுதாக 26-08-1997

புன்சிரிப்பால் உலகாண்ட மைதிலி!
ஆயிரம் வசீகரங்களின் பிறப்பே!
தளையறுத்த உணர்வுகளின்
வெளிப்பாடே கவிதையெனில்
நீ கவிதை.

நம்துயரொழிக்கும் படையணியில்
அணிவகுத்தாய்; ஆர்ப்பரித்தாய்
அலையாய் மோதும் உனதுணர்வு
நம் மனக்கரையில் எதிரொலிக்கும்
நாளும்.

- குடும்பத்தினர்,
சுன்னாகம் தெற்கு.

தகவல்:
இ.முரளி (பிரான்ஸ்)
அன்புத் தம்பி

(21804) (21-19-15)

# 'என்ன சம்பவம் நடந்தாலும் எம்மீதே பழி!' அரசியல்துறை பொறுப்பாளர் பாவா கவலை

தற்போதைய காலகட்டத்தில் எடுத்ததற்கெல்லாம் தமிழீழ விடுதலைப் புலிகள் மீதே அபத்தமாகப் பழிசுமத்தும் படலம் தொடர்ந்து வருவது கவலைக்குரியதும் விசனிக்கத் தக்கதுமாகும். இத்தகைய நிலை ஆரோக்கியமானதல்ல என்றார் விடுதலைப் புலிகளின் அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் பாவா.

சாய்ந்தமருதைச் சேர்ந்த முஸ்லிம் இளைஞர்கள் இருவர் இனந்தெரியாதவர்களால் கடத்தப்பட்டுள்ளனர் என்று கருதப்படுவதால் கல்முனைப் பிரதேசத்தில் எழுந்துள்ள பதற்ற நிலை, கொந்தளிப்பு ஆகியவை தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அரசியல்துறைப் பொறுப்பாளர் பாவா தொடர்ந்து கருத்து வெளியிடுகையில் பின்வருமாறு கூறினார்.

நாட்டின் இன்றைய நிலை என்ன? ஆயுதங்களால் சூழப்பட்ட கலாசார நிலைமையில் நாமிருக்கின்றோம்.

இக்காலகட்டத்தில் என்ன சம்பவம் நடந்தாலும், எடுத்ததற்கெல்லாம அவற்றுடன் விடுதலைப் புலிகளையே சம்பந்தப்படுத்தி அபத்தமான பழிகள் சுமத்தப்படுகின்றன.

சம்பவங்களின் பின்னணி, உண்மை நிலை கண்டறியப்பட்டு ஊர்ஜிதப்படுத்தப்படாமலே இத்தகைய பழிகளை எம்மீது சுமத்திவருவது கவலை தருகின்றது.

உட்பூசல்களாலும் கபட நாடகங்களாலும் அரங்கேறும் சம்பவங்களைக கூட இனம் காணாமல், விடுதலைப் புலிகள்மீது அபத்தமான பழிகள் சுமத்தப்படுவதை அனுமதிக்க முடியாது.

நாம் இன்று ஆயுதமில்லாமல் அரசியல் வேலைத்திட்டங்களைத் தொடர்ந்து நடைமுறைப்படுத்தி வருகின்றோம்.

ஆனால், நம் தமிழ், முஸ்லிம் நல்லுறவைக் கட்டிவளர்த்துவரும்போது அப்பாவி மக்களைத் தூண்டிவிட்டு இலாபம் தேடச் சிலர் முற்படுகிறார்கள். அவர்களின் செயலை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

சாய்ந்தமருது முஸ்லிம் இளைஞர்கள் இருவரது சம்பவத்திற்கும் எமக்கும் எவ்வித தொடர்புமில்லை.

இந்த இளைஞர்கள் பற்றிய உண்மை நிலையைக்கண்டறிவதற்கு எமது பூரண ஒத்துழைப்பை வழங்குவோம்.

நாம் எவரையும் பழிவாங்கும் நிலையில் இல்லை. அப்பாவிகளைக் கொலை செய்வதால் நாம் என்ன பலனை எதிர்கொள்ளப்போகின்றோம்?

நாம் பழிவாங்கும் நிலையிலிருந்தால், தமிழ் மக்களுக்கு எதிராகச் செயற்பட்டவர்கள், விடுதலைப் போராடடத்திற்கு எதிராகச் செயற்பட்டவர்களையெல்லாம் கொன்று குவித்திருககலாம்.

ஆனால், நாம் அப்படி நடந்து கொள்ளவில்லை.

இத்தகையவர்கள் எல்லோரும் இன்று சுதந்திரமாக நடமாடித்திரிகின்றனர்.

எனவே, சாய்ந்தமருது அப்பாவி முஸ்லிம் இளைஞர்களைக் கடத்துவதற்கோ, அவர்களைக் கொல்வதற்கோ எமக்கு என்ன அவசியமிருக்கின்றது?

தமிழ், முஸ்லிம் உறவு நிலையை வளர்க்கவும், மேம்படுத்தவுமே நாம் முயற்சிசெய்து வருகின்றோம்.

தமிழ், முஸ்லிம் நல்லுறவைச் சகிக்க முடியாத, சுயநலநோக்கு கொண்டசில புல்லுருவிகளின் தூண்டுதல்களாலேயே இத்தகைய பழிகள் எம்மீது சுமத்தப்படுகின்றன.

நடக்கும் சம்பவங்களின் உண்மை நிலையை முஸ்லிம் மக்கள் ஆராய்ந்து அறிந்து தெளிவுபெறவேண்டும்.

எடுத்ததற்கெல்லாம் விடுதலைப் புலிகள் மீதே பழிசுமத்துவதைத் தவிர்த்து உண்மையைப் புலப்படுத்த வேண்டும். இப்படி அவர் கூறினார்.

விடுதலைப் புலிகளின் கல்முனைக் கோட்டப் பொறுப்பாளர் ராஜ்குமார் கருத்துத் தெரிவிக்கையில்,

• நடந்த சம்பவம் தொடர்பில் உண்மை நிலை தெளிவுறாமலும், உறுதிப்படுத்தப்படாதுமுள்ள நிலையில் ஆர்ப்பாட்டம் செய்வதையும் மகஜர் கையளிக்க முனைவதையும் நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

சாய்ந்தமருதைச் சேர்ந்த இரு முஸ்லிம் இளைஞர்கள் தொடர்பாகப் புலனாய்வு செய்து உண்மைநிலையை தெளிவுபடுத்துமாறு எமது பிரதேச அரசியல்துறைப் பணிமனைகளையும் கோரியுள்ளோம் - என்றார்.

கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகல நாடாளுமன்ற உறுப்பினர் மயோன முஸ்தபா கூட்டிய பதற்ற நிலைத் தணிப்புக் கூட்டத்திற்கு அழைப்பு விடுக்கப்பட்டதாகவும், அவர் தனியொரு கட்சியின் பிரதிநிதியாக இக்கூட்டத்தை ஏற்பாடு செய்ததால் விடுதலைப் புலிகளாகிய நாம் கலந்துகொள்ளவில்லையென்றும், தனிப்பட்ட கட்சி இலாபத்திற்கு நாம் துணை புரிய முடியதென்றும் கோட்ட அரசியல் பொறுப்பாளர் ராஜ்குமார் மேலும் தெரிவித்தார்.

மாவட்டத்தின் சகல தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்துகொள்ளும் கூட்டமாகவோ, பள்ளி வாசல்களின் சம்மேளனம் ஏற்பாடு செய்த கூட்டமாகவோ இருந்திருந்தால் நாம் பங்குபற்றியிருப்போம் என்றும் அவர் கூறினார்.

எனினும், கடத்தப்பட்ட இளைஞர்களின் குடும்பத்தவர்கள், பள்ளிவாசல் பிரதிநிதிகள், பொலீஸ் உயரதிகாரிகள் கலந்துகொண்ட மற்றொரு கூட்டத்தில் தாம் பங்கு கொண்டதாகவும் அவர் தெரிவித்தார்.



இலங்கை பட்டயக் கணக்காளர் பரீட்சை அண்மையில் யாழ். உயர் தொழில்நுட்ப நிறுவனத்தில் நடைபெற்ற சமயம் எடுக்கப்பட்ட படம் இது. பட்டயக் கணக்காளர் எஸ்.அன்னலிங்கம் மற்றும் பரீட்சை மேற்பார்வையாளர்களையும் பரீட்சார்த்திகளையும் படத்தில் காணலாம்.

## கலாசார அலுவலர்களுக்கு கூட்டம்

யாழ்ப்பாணம்,ஓக.26

யாழ். மாவட்ட பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் கலாசார உத்தியோகத்தர்களுக்கான கூட்டம் எதிர்வரும் 29 ஆம் திகதி வியாழக் கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ். செயலகத்தில் நடைபெறவுள்ளது.

## தளபாடம் இன்றி மாணவர் அவதி

கைதடி,ஓக.26

தென்மராட்சிக் கல்விக் கோட்டத்தில் உள்ள கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயம் கல்விச் செயற்பாடுகளை முன்னெடுப்பதில் பல கஷ்ரங்களைச் சந்திப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இப்பாடசாலையில் 430 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர். ஆனால், இவர்களின் பாவனைக்கு 67 தளபாடங்களே நல்ல நிலையில் உள்ளன. இதனால் நிலத்தில் இருந்தே கல்விகற்க வேண்டிய நிலைக்கு மாணவர்கள் உள்ளாக்கப் பட்டுள்ளனர். (எ-75)

## நல்லூர் ஆலயச் சூழலில்

யாழ்ப்பாணம்,ஓக.26

நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தினரால் நடத்தப்பட்டுவரும் தெய்வீக இசையரங்கு நிகழ்வில் இன்று மாலை 6.30 மணிக்கு நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் எஸ்.கணபதிப்பிள்ளையின் பாட்டுக் கச்சேரி இடம்பெறும்.

இதில் பக்கவாத்தியக் கலைஞர்களாக வயலின் - ஆர்.ராதாகிருஷ்ணன், மிருதங்கம் - பி.கிருபாகரன், முகர்சிங் - எம்.கஜன் ஆகியோர் பங்கேற்கவுள்ளனர். (எ-10)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஓக.26

நல்லூர் சைவ மகாசபையினரால் ஆலய மேற்கு வீதியில் உள்ள ஸ்ரீமுத்து விநாயகர் ஆலய அரங்கில் நடத்தப்பட்டுவரும் தெய்வீகத் தொடர் இசைச் சொற்பொழிவு நிகழ்வில் இன்று மாலை 6மணிக்கு 'கால்மாறி ஆடிய கபாலி' பற்றி சிவஸ்ரீ சி.வைநித்தியானந்தசர்மா இசைச் சொற்பொழிவு ஆற்றவுள்ளார். (எ-10)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஓக.26

வடபிரதேச இந்துப் பேரவையால் நல்லூர் அறுபத்துமூன்று நாயன்மார் குருபூசை மடத்தில் நடத்தப்பட்டு வரும் தெய்வீக நிகழ்ச்சித் தொடரில் இன்று மாலை 6 மணிக்கு 'உலகம் குளிர்வித்தவன்' என்னும் தலைப்பில் தி.சிவதட்சணாமூர்த்தி சொற்பொழிவாற்றவுள்ளார். (எ-10)

★ ★ ★

'புலிகளின் குரல்' ஏற்பாட்டில் ஆலயதெற்கு வீதியில் ஆறு மணிக்கு மாவீரன் பண்டாரவன்னியன் நாட்டுக் கூத்தும் அருணா இசைக்குழுவின் எழுச்சி கானங்களும் இடம்பெறும்.

# சந்நிதி முருகன் ஆலயத்தில் புதனன்று உற்சவம் ஆரம்பம்



யாழ்ப்பாணம், ஓக.26

வரலாற்றுச் சிறப்புமிக்க தொண்டமனாறு செல்வச்சந்நிதி ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை புதன்கிழமை பின்னிரவு 1.36 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

அடுத்தமாதம் 10 ஆம் திகதி வரை தொடர்ந்து 15நாள்கள் திருவிழா நடைபெறும்.

எதிர்வரும் 5ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு பூங்காவனமும் 6ஆம் திகதி சனிக் கிழமை காலை 8மணிக்கு கைலாச வாகனமும் 8ஆம் திகதி திங்கட் கிழமை 5மணிக்கு சப்பறத்திருவிழாவும் 9 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு தேர்த்திருவிழாவும் 10ஆம்திகதி புதன்கிழமை காலை தீர்த்தோற்சவமும் அன்றைய தினம் மாலை 5 மணிக்கு மௌனத் திருவிழாவும் இடம்பெறும்.

உற்சவ தினங்களில் தினமும் காலைத் திருவிழா 8மணிக்கும், இரவுத் திருவிழா மாலை 4.30 மணிக்கும் நடைபெறும்.


மஹோற்சவத்தை முன்னிட்டு ஆலயச் சூழலில் கதாப்பிரசங்கம் மற்றும் சமயச் சொற்பொழிவுகளும் நடைபெறவுள்ளன.

உற்சவத்தில் கலந்துகொள்ளும் அடியார்களின் நன்மைகருதி சாரணர்கள், சென்ஜோன்ஸ் அம்புலன் ஸ் படைப்பிரிவினர், இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தினர் சேவையில் ஈடுபடுவர்.

இவ்வருட உற்சவத்தில் பெரும் எண்ணிக்கையான பக்தர்கள் கலந்து கொள்வர் என எதிர்பார்க்கப்படுகிறது. (எ-5)

# நல்லூர் உற்சவகால சிறப்பம்சம்

இருபத்தினான்காம் (தேர்) திருவிழா



## வினை தீர்க்க தேரேறி வருகிறான்

வாசமலரெடுத்து தூவி நின்றேன் - நல்லை
வாசனைத் தினமும் தொழுது நின்றேன்
பாசமுடன் பாமாலை பாடிவந்தேன் - பக்திப்
பரவசமாகி அவன் கழல் பிடித்தேன்
நேசமுடன் நெற்றியில் நீறணிந்தேன் - குமரன்
வாசலில் குதூகலக் கோலம் கொண்டேன்
தேசவினை தீர்க்க தேரேறி வருகிறான் - முருகன்
பாசநெஞ்சில் அவன் பள்ளிகொள்ள வருகிறான்.

- எம்.சுயர்சன்
கோண்டாவில்.

## தேவர்கள் போற்றும் தெய்வக் குமரா

தேனூறும் கந்தா உன் பெயர்சொல்ல
தேவாரப் பண்ணிசை காதோரம் ஒலிக்க
தேவா உனைத் தொழுது நின்று
தேம்பியே அருள் வேண்டி நிற்க
தேர்மீது வந்தே தரிசனம் தருவாய்
தேவர்கள் போற்றும் தெய்வீகக்குமரா!

- க.பகீரதன்
கொழும்புத்துறை

## வடம்தொட்டு இடம் பிடிப்போம்!

நல்லைப்பதி வீதியிலே செல்வரதம் வருகுதய்யா
கொஞ்சுமெழில் பெருகிடவே ஆறுமுகன் தேரில் வாறார்
அடியவர்கள் நேர்த்தியினை ஆர்வமுடன் செய்துவர
அடியழிக்கும் பெண்மணிகள் அன்புடனே தொழுதுவர
ஆறுமுகன் அருகினிலே வள்ளிதெய்வ யானைவர
நாதஸ்வரத் தேன்மழையில் அனைவருமே நனைந்துவர
நல்லவடம் தொட்டிழுத்து இடம்பிடிப்போம் முத்தியிலே

- கவிமணி கந்த முருகேசதாசனார்.

## ஊருக்குப் போக தேருக்கு வருகிறார்கள்

எல்லோரும் ஊருக்கு வருகிறார்கள்
ஏற்றதோர் தீர்வுக்கு ஏங்கிறார்கள்
நல்லூர் முருகனை நாளும் நாடுகிறார்கள்
நமக்கொரு விடிவைக் கேட்கிறார்கள்
பல்லோரும் போற்றிடும் ஆறுமுகவா
பாங்கான வாழ்வுக்கு வழிகாட்டு
பொல்லாத துயரெலாம் நீங்கட்டும்
புதியதோர் வாழ்விங்கு மலரட்டும்.

• ஆராதனன் - ஸ்ரீகவி

## சமாதானம் வந்ததென்று குரல் எழுப்புவோம்!

வடம் பிடித்து பக்தர் குழாம் தேரிழுக்கிறார்
வான் பிளக்க அரோகரா ஒலி எழுப்புறார்
விண்ணவர்கள் கூடி நின்று மலர் சொரிகிறார்
வேதியர்கள்கூடி தீப ஒளி பரப்புறார்.

பல் இனத்தவரும் கூடி குமரன் பத[illegible]ழுகிறார்
பகைமை எமக்குள் இல்லை என்று உ[illegible] காள்கிறார்
சண்டை எமக்குள் இல்லை என்று மனம் மகிழ்கிறார்
சமாதானம் வந்ததென்று குரல் எழுப்புறார்.

திருமதி ம.நவரத்தினம்
கொக்குவில.

## உயிர்கள் வாழ அருள் புரிக!

*கட்டழகு கொண்டவுடல் கந்தா உன்னை*
*பட்டழகுப் பொன் பூட்டித் தேரிலேற்றி– கவியினிலே*
*தொட்டெழுத ஊனுருகத் துணிவும் கொண்டேன்!*
*தட்டிவிடு துன்பமெலாம் உயிர்கள் வாழ!*

லோ.துஷிகரன்
தாவடி.

# 20ஆவது ஆண்டு நினைவலைகள்

| பிறப்பு | | இறப்பு |
|---|---|---|
| 11 | | 26 |
| 04 | | 08 |
| 1936 | | 1983 |



# திருமதி தியாகராசா மாணிக்கம்

(சின்னாலடி, காரைநகர்)

ஆண்டுகள் இருபது ஆனாலும் ஆறாதே எம் நெஞ்சம்
தூண்டாமணி விளக்காய் ஒளி வீசிய இல்லம் இன்று
வேண்டாத இருள் மூழ்கி பிரகாசமின்றிப் போய்விட்டதே!
இங்கு உமது செல்வங்களின் இலட்சுமீகர வாழ்வைக்
கண்டு களிக்காது விண்ணுலகைச் சென்றடைந்தீரோ?
ஆண்டவனை வேண்டுகிறோம் ஆத்ம சாந்தி வேண்டியே!

S.T.பரமேஸ்வரன் அன் கம்பனி,
212, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 5504

ஈஸ்வரன் ரேடர்ஸ்.
69, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 2813

மகாலட்சுமி ஸ்ரோர்ஸ்,
212, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021-222 2024, 021-222 2025

பிரிவால் கலங்கி நிற்கும்:
அன்புக் கணவர்,
பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

**அன்னாரின் ஞாபகார்த்தமாக இன்று நல்லூர் தெற்கு வீதியில் அமைந்துள்ள மகாலட்சுமி தாகசாந்தி நிலையத்தில் அடியவர்களுக்கு தாகசாந்தி அளிக்கப்படும்.**

UTHAYAN Graphics (C/29784)

# பொற்பதியில் முகாம் அமைப்பதில் படையினர் தொடர்ந்து தீவிரம்

## பல்கலை மாணவரிடம் அப்பகுதி மக்கள் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஓக.26

வடமராட்சி குடத்தனை கிழக்கு, பொற்பதிப் பகுதியில் முகாம் அமைப்பதில் படையினர் தொடர்ந்து தீவிரம் காட்டி வருகின்றனர். இது தொடர்பாக அவர்கள் எம்மையும் மிரட்டி வருகின்றனர்.

தம்மைச் சந்தித்த சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையினரிடமும் யாழ்.பல்கலைக்கழக மாணவர்களிடமும் பொற்பதிப் பகுதி மக்கள் இவ்வாறு தெரிவித்துள்ளனர் என சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

சுமார் 200 மீனவ குடும்பங்கள் வசிக்கும் பொற்பதி கிராமத்தைச் சூழ முகாம் அமைக்கப் படையினர் முயற்சி எடுத்தனர். எனினும், அப்பகுதி மீனவர்சங்கம் இதுபற்றி மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கும் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கும் அறிவித்ததை அடுத்து முகாம அமைக்கும் பணிகள் தற்போது இடைநிறுத்தப்பட்டுள்ளன. ஆனால், படையினர் அப்பகுதியில் முகாம் அமைக்கப்போவதாக பொதுமக்களை மிரட்டி வருகின்றனர்.

இந்த முகாம் அமைக்கப்பட்டால் தமது அன்றாட பணிகள் பாதிப்படையும் என்றும் பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.

யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் இங்கு வந்து படையினருடன் நீண்ட நேரம் கதைத்து விட்டு முகாம் அமைப்பதை நியாயப்படுத்தி கருத்துக் கூறிவிட்டுச் சென்றுவிட்டனர்.

கண்காணிப்புக் குழுவினரின் இந்த கருத்து, மக்கள் மத்தியில் பெரும் அதிருப்தி நிலையைத் தோற்றுவித்துள்ளது.

எக்காரணம் கொண்டும் தமது கிராமத்தைச் சூழ முகாம் அமைப்பதை அனுமதிக்கப் போவதில்லை என்றும அதற்கு எதிராகத் தமது எதிர்ப்பினைக் காட்டுவோம் என்றும் பொது மக்கள் தெரிவித்துள்ளனர் என்று அதில் உள்ளது. (எ-10)

# இளவாலை ஆலயத்தில விநாயகர் சிலை திருட்டு

சண்டிலிப்பாய்,ஓக.26

இளவாலை வடக்கு ஆனைவிழுந்தான் பிள்ளையார் ஆலயத்தில் இருந்த பிள்ளையார் விக்கிரகம் பகல்வேளையில் திருட்டுப்போயுள்ளது.

ஆலயத்தின் கொடிக்கம்பத்திற்கு, பக்கத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டிருந்த கருங்கல்லினால் உருவாக்கப்பட்ட பிள்ளையார் விக்கிரகமே இவ்வாறு திருட்டுப்போயுள்ளது.

கடந்த 18ஆம் திகதி காலைப் பூசை முடிந்தவுடன் பூசகரும் வழிபாடு செய்ய வந்தவர்களும் சென்ற பின்னர் முற்பகல் 10 மணியளவில் கறுப்பு நிற மோட்டார் சைக்கிள் ஒன்றில் வந்தவர்கள் அவ்விடத்தில் நடமாடியதாக தமக்கு தகவல் கிடைத்துள்ளது என்றும் -

இவர்களே இத்திருட்டை மேற்கொண்டிருக்கலாம் என சந்தேசிக்கப்படுகின்றது என்றும் -

ஆலய பரிபாலன சபையின் தலைவர் பா.தர்மபாலா இதுபற்றித் தகவல் தருகையில் தெரிவித்தார்.

இத்திருட்டுச் சம்பவம் பற்றி இளவாலை பொலீஸ் நிலையத்தில் ஆலய பரிபாலன சபையினர் முறைப்பாடு செய்துள்ளனர்.

பொலீஸார் ஆலயத்திற்கு வருகை தந்து விசாரணை மேற்கொண்டனர். ஆலயங்களில் விக்கிரகங்களை திருடிவிற்கும் கோஷ்டியினரின் கைவரிசையாக இது இருக்கலாம் என்று சந்தேகம் தெரிவிக்கப்படுகின்றது. (எ-135)

### வைத்திய அதிகாரிக்கு விடுதி

வட்டுக்கோட்டை அரசினர் கிராமிய வைத்தியசாலையில் நீப் (Neerp) திட்டத்தின் கீழ் 20 லட்சம் ரூபா செலவில் வைத்திய அதிகாரிக்கான விடுதி ஒன்று விரைவில் நிர்மாணிக்கப்படவுள்ளது. (10-135)




கிளிநொச்சி மாவட்ட ஆஸ்பத்திரிக்கு ஒரு தொகுதி மருத்துவ உபகரணங்கள் அண்மையில் அன்பளிப்புச் செய்யப்பட்டன. இதுதொடர்பாக இடம் பெற்ற நிகழ்வில் எடுக்கப்பட்ட படம் இது. ஓ.பி.ஏ.எல். அமைப்பின் உதவியுடன் கொழும்பு இனர் லயன்ஸ் கழகம் இதனை வழங்கியிருந்தது.

## தென்மராட்சியில் விவசாயத்துக்கு அனுமதிக்கப்பட்ட பகுதியில்

# கண்ணிகளை அகற்ற அனுமதிக்குமாறு அரச அதிபர் படைத்தரப்பிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஓக.26

தென்மராட்சி தெற்குப் பகுதியில் உயர்பாதுகாப்பு வலயப் பகுதிக்குள் படையினரால் அண்மையில் விவசாய செய்கைக்கு அனுமதிக்கப்பட்ட இடங்களில் இருந்து கண்ணி வெடிகளை அகற்ற அனுமதிக்குமாறு யாழ். அரச அதிபர், யாழ்.மாவட்ட படைத்தளபதியிடம் கோரியுள்ளார்.

தனங்களப்பு, மறவன்புலோ, கைதடி - நாவற்குழி பகுதிகளில் ஆயிரம் ஏக்கர் வயல் நிலத்தில் இவ்வருட காலபோக செய்கை மேற்கொள்ள படையினரால் அனுமதிக்கப்பட்டுள்ளது.

அதியுயர் பாதுகாப்பு வலயத்துக்குள் உள்ள இந்தப் பகுதிக்குள் இனனும் கண்ணிவெடிகள் அகற்றப்படவில்லை. இதனால், அனுமதிக்கப்பட்ட வயல் நிலங்களில் பெரும்போகச் செய்கைக்கான ஏற்பாடுகளைச் செய்ய முடியாத நிலையில் விவசாயிகள் உள்ளனர்.

எனவே, கண்ணிகளை அகற்றி விவசாயச் செய்கைக்கு உதவுமாறு இப்பகுதி விவசாயிகள் அரச அதிபரிடமும் வடபகுதி இராணுவத் தளபதியிடமும் மகஜர்கள் மூலம் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இதனைத் தொடர்ந்து கண்ணிகளை அகற்ற அனுமதி வழங்குமாறு அரச அதிபர், யாழ்.மாவட்ட இராணுவத் தளபதியிடம் கேட்டுள்ளார். அனுமதி கிடைத்ததும் 'ஹலோ ரஸ்ட்' நிறுவனம் இந்தப் பகுதியில் கண்ணிகளை அகற்றும் நடவடிக்கையில் ஈடுபடும் என்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை -

அனுமதிக்கப்பட்டுள்ள பகுதிக்கு விவசாயிகள் செல்வதற்கு மூன்று பாதைகளை அனுமதிப்பதற்கும் படையினர் இணங்கியுள்ளனர். (ம)

# கட்சி ரீதியான அதிகார வெறியை முன்வைக்கும் பேரினவாதக் கட்சிகள்!

## தமிழர் பிரச்சினை தீர ஒருங்கிணைந்த முயற்சியில் அக்கறை இல்லை

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி-லங்கா சமசமாஜக் கட்சி-இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி ஆகியவற்றின் கூட்டில் உருவானது பொதுஜன ஐக்கிய முன்னணி.

இதன் மூலக் கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சிங்களம் மட்டும் ஆட்சி மொழிச் சட்டத்தோடு இனப் பிரச்சினையை ஆரம்பித்தது.

ஆனால், முதலில் சமாதானப் பேச்சை ஆரம்பித்து பண்டா-செல்வா ஒப்பந்தம் என்ற தீர்வை ஒப்புக்கொண்ட கட்சியும் அதுதான்.

ஆனால், ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க தனது ஆட்சியில் தரப்படுத்தல் என்ற மோசமான அளவுகோலை நீட்டி வடக்கு - கிழக்கின கல்விக்கு வேட்டு வைத்தார்.

இவர் காலத்தில் யாழ்ப்பாணத்தில் நடந்த உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு குழப்பியடிக்கப்பட்டு, உயிர்ச்சேதங்கள் ஏற்படுத்தப்பட்டன.

ஆயினும், 1972 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட அரசமைப்புச் சட்டத்தில் தமிழரசுக்கட்சி முன்வைத்த குறைந்தபட்சக் கோரிக்கைகளை அரசமைப்பில் சேர்க்கும் படி ஸ்ரீமாவோ கூறினார்.

ஆயினும், கொல்வின் ஆர்.டி சில்வா அதனை தட்டிக்கழித்தார்.

சோல்பரி அரசியல் திட்டம் மூலம சிறுபான்மையினரின் பாதுகாப்புக்கென வழங்கப்பட்ட 29ஆவது விதியை மாற்றியே புதிய அரசமைப்புச் சட்டம் கொண்டுவரப்பட்டது.

சிறுபான்மையினரை அரசியல் ரீதியாக இரண்டாம் தரப் பிரஜைகளாக்கியது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி.

ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆகியவற்றின் அணுகுமுறையை விட பொதுஜன ஐக்கிய முன்னணி என்ற பெயரில் இயங்கிய அணி ஓர் அணுகுமுறையோடு அரசியலில் கால் பதித்தது.

இந்த நாட்டில் வாழும் தமிழர்களுக்குப் பிரச்சினை உண்டு என்று ஏற்றுக்கொண்டு அதைப் பகிரங்கமாக ஒப்புக்கொண்ட முதலாவது சிங்களத தலைவி சந்திரிகாவே.

### நல்லாட்சிக்கு வழி

சமாதானம் மூலமே நாட்டில் நல்லாட்சி செய்ய முடியும் என்று ஊருக்கும் உலகிற்கும் கூறியவரும் அவரேதான்.

பின்னர் அவர் ஆட்சியைப் பிடித்ததும் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பித்தார். யார் செய்த பாவமோ சமாதானம் சறுக்கியது - சண்டைமூண்டது - பாரிய அழிவுகளில் நாட்டைத் தள்ளிவிட்டு - ஆட்சியை இழந்தது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி 1972ஆம் ஆண்டில் கொண்டுவந்த அரசியல் யாப்பும் ஐ.தே.கட்சியால் அறிமுகம் செய்யப்பட்ட 1978 ஆம் ஆண்டு அரசியல் யாப்பும் ஒற்றையாட்சியையும் - பௌத்த சமயத்தையுமே வலியுறுத்தின.

ஆனால், பொதுஜன ஐக்கிய முன்னணியால் அறிமுகம் செய்யப்பட்ட உத்தேச அரசியல் யாப்பு சற்று வேறுபாடாக இருந்தது. உத்தேச அரசியல் யாப்பின் நகல்திட்டத்தின்படி முதலாம் அத்தியாயத்தில் முதலாம் சரத்து இவ்வாறு அமைந்தது.

"இலங்கை ஐக்கியமும் இறைமையும் கொண்ட குடியாரசாகும் இலங்கைக் குடியரசு கலைக்க முடியாத பிராந்தியங்களின் ஒன்றியமாக இருக்க வேண்டும்.

ஜனாதிபதி முறை ஒழிக்கப்பட்டு, நாடாளுமன்றத்திற்குப் பொறுப்புக்கூறக் கடமைப்பட்ட அமைச்சர்களைக் கொண்ட அரசாங்க முறை ஸ்தாபிக்கப்படும். அதன் மூலம் ஜனாதிபதி பெயரளவில் ஒரு நிருவாகி என்ற நிலையினைப் பெறுவார்.

இவ்வாறு அந்தச் சரத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

### ஒன்றிய ஆட்சி முறை

ஒற்றையாட்சிக்கும் இணைப்பாட்சிக்கும் இடைப்பட்ட ஆட்சி முறையே ஒன்றிய ஆட்சி முறையாகும்.

அதிமேலான சட்டத்துணை அதிகாரத்தைப் பிரயோகிக்கும் ஒரு மத்திய அரசின் கீழ் அரசாங்கத்தின் அதிகாரம் அமைந்திருப்பின் அவ்வாறான அரசியல் யாப்பு "ஒற்றை ஆட்சி அரசியல் யாப்பு" என அழைக்கப்படும் என்று பேராசிரியர் கலெயார் பெலி கூறுகிறார்.

ஆனால், இணைப்பாட்சியின் நிலை அதுவல்ல. இணைப்பாட்சி முறையில் அதிகாரம் மத்திய தேசிய அரசுக்கும் பிரதேச அரசுகளுக்கும் இடையில் பிரிக்க முடியாதிருக்கும். மத்திய அரசும் பிரதேச அரசுகளும் ஒன்றுக்கொன்று சமமானவை ஆகும். ஒன்று பிறிதொன்றுக்குக் கீழ்படாது. ஒன்றிய அரசும் இணைப்பாட்சியைப்போன்று பல அரசுகளின் ஒன்றியமாகும்.

**பூ.ம.செல்லத்துரை**

அதனால், இணைப்பாட்சிப் பண்புகள் காணப்படுகின்றன. ஆனால், இணைப்பாட்சி முறையை விட ஒன்றிய ஆட்சிமுறையில் அவசரகால நிலையில் பிராந்திய அரசுகளின் அதிகாரத்திற்குட்பட்ட விடயங்களை மத்திய அரசு பொறுப்பு ஏற்கக்கூடிய நிலை புகுத்தப்பட்டுள்ளது. இந்நிலையைத் தவிர்த்தால் ஒன்றிய 'ஆட்சியில் ஆபத்தில்லை.

இலங்கை அரசியலில் இனப்பிரச்சினையை இணக்கமாகத் தீர்ப்பதற்கு உரிய வழி - சிறந்த அணுகுமுறை இணைப்பாட்சிதான்.

இந்த இணைப்பாட்சி சொற்பிரயோகம் சிங்கள மக்கள் மத்தியில் ஆர்வத்தை ஏற்படுத்தக் கூடியதாகும்.

தமிழரை விட அதைச் சிங்களவரே கூடுதலாக நேசித்தார்கள். டொனமூர் அரசியல் விசாரணை சபையிலும் அவர்களே முன்மொழிந்தார்கள்.

வேற்றுமையில் ஒற்றுமைகாணும் அந்த அரசியல் திட்டத்தின் உண்மையான கருத்தை அடியோடு மாற்றி - பிரிவினை என்ற விஷக் கருத்தை ஆழப்பதித்து சிங்களவரிடையே நீறுபூத்தநெருப்பாக்கியுள்ளார்கள்.

எனவே, இணைப்பாட்சி என்ற சொல் சிங்களவரிடையே இணையாத மனத்தை ஏற்படுத்தியுள்ளது.

### அதிகார வெறியே முக்கியம்

அதுமட்டுமல்ல, சிங்கள அரசியல் கட்சிகளைச் சேர்ந்தோர் நாட்டையும் மக்களையும் நேசிக்கவில்லை. தங்கள் தங்கள் கட்சியின் அதிகார வெறியை மட்டுமே முன்னெடுக்கிறார்கள்.

இருவேறு சந்தர்ப்பங்களில் நாட்டை ஆண்ட இருகட்சிகளும் இணைந்து கருத்தொருமித்த முடிவுகளை எடுக்கவில்லை.

ஐ.தே.கட்சி ஆட்சிக்காலத்தில் மங்கள முனசிங்கா தலைமையில் நாடாளுமன்றக் குழு எடுத்த ஏகமனதான தீர்வை ஐ.தே.கட்சி கருவிலேயே அழித்தது.

அடுத்து பொ.ஐ.முன்னணியின் ஆட்சியின் போது சந்திரிகா, "பிராந்தியங்களில் ஒன்றியம்" என்ற அரசியல் யாப்பு நகலை முன்மொழிந்தார். அதை வெளிப்படையாகவே எதிர்த்து - தீக்கிரையாக்கியது ஐ.தே.கட்சியாகும்.

எனவே, பொதுஜன ஐக்கிய முன்னணியினர் சந்தர்ப்ப சூழலால் தப்பான - தவறான கோணத்தில் சமாதானப் பேச்சைத் திசை திருப்பி பிழையான அணுகுமுறையைப் பயனபடுத்தி, சண்டைமூலம் சமாதானம் காணும் புதிய சித்தாந்தத்தை வரலாற்றில் பதிய முயன்று வரலாற்றையே தொலைத்து ஏங்குகிறார்கள்.

சண்டையை எவ்வளவோ மும்முரமாக நடத்திய சந்திரிகாவே - சமாதானத்தின் தேவையை உள்நாட்டிலும உலக அரங்கிலும் பதித்தார் என்பதை மறக்க முடியாது.

பிரித்தானிய உதவி அமைச்சரான இயன்சிமித்தின் மூலம் - ஐ.தே.கட்சியினரோடு புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துகொண்டுதான், இரு கட்சிகளும் இணைந்து ஏகமனதாக ஏற்றுக்கொண்ட முடிவையே 'பிரதேசங்களின ஒன்றியம்' என்ற தலைப்பில் புதிய அரசியல் யாப்பாக நாடாளுமன்றத்தில் முன்வைத்தார் சந்திரிகா.

### தீயிட்டுக் கொளுத்தியவர்கள்

ஒத்துக்கொண்ட தீர்வையே தீயிட்டுக் கொளுத்திய ஐ.தே.கவினர், அதைவிட வேறு எதைத்தான் தரப்போகிறார்கள்?

நாடாளுமன்றத்தில் அறுதிப் பெரும்பான்மையும் - சர்வநிறைவேற்று அதிகாரமுமில்லாதவர்கள் எவ்வாறு விடுதலைப் புலிகள் எதிர்பார்க்கும் இடைக்கால அரசைத் தரப்போகிறார்கள்?

அரசியல் யாப்புக்கு அப்பாற்பட்டே புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டது. அது சரியானால் அந்த அடிப்படையில் இடைக்கால அரசை வழங்குவதில் அரசுக்கு தயக்கம் ஏன்? மயக்கம் ஏன்? தாமதம் ஏன்?

பயத்தினால் யானை அடிக்கும்-பாம்பு கடிக்கும் - பயத்தால் விளைந்ததே - பொதுஜன ஐக்கிய முன்னணியின் சீற்றம்.

சினத்தின் பெறுபேறு சீரழிவு. இதை நாடு கண்டு நடுங்குகிறது.

1983 ஆம் ஆண்டு ஐ.தே.கட்சி ஆட்சியே திட்ட[illegible] ஜூலை கலவரத்தை நடத்[illegible] நாடு கடத்தியது. [illegible]னைத்துப் பேசுகிறோம்.

அவ்வாறு [illegible]துஜன ஐக்கிய முன்னணிக்கும் ஒரு சந்தர்ப்பத்தைக கொடுத்துப்பார்த்தால் என்ன என்ற அரசியல் ஆய்வாளர்களின் கேள்வி அழுத்தமும் பொருத்தமும் மிக்கதாகும்.

வெறும் வாயைமென்று காலத்தை வீணாக்குவதை விட அவலையும் சேர்த்து மென்று பார்ப்பதில் தவறில்லை.

அரசியலில் நீடித்த நண்பரும் இல்லை. நிலைத்து நின்ற எதிரியும் இல்லை.

கையில் வெண்ணெயை வைத்துக் கொண்டு நெய்க்கு அலைவதைவிட -வெண்ணெய் திரண்டு வரும் போது தாழியை உடையாது-நெய்எடுப்பதே சிறந்த சாணக்கியமாகும்.

# உடப்பு மீனவர்கள் வடமராட்சிக்கு

வடமராட்சி கிழக்கு,ஓக.26

உடப்பு மீனவர்கள் கரை வலைத் தொழிலில் ஈடுபடுவதற்காக வடமராட்சி கிழக்கின் வண்ணாங்குளம், சுண்டிக்குளம் ஆகிய இடங்களுக்கு வந்துள்ளனர்.

பருவகால மீன் பிடித் தொழிலுக்காக அப்பகுதிகளுக்கு வந்து சேர்ந்துள்ள மீனவர்கள் வாடிகளை அமைத்து தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். (எ-182)


## இந்திய ஜோதிடர் யாழ். விஜயம்

ஸ்ரீ சோட்டா நிக்கரை பகவதி அம்மன் அருள்பெற்று ஸ்ரீ வெட்டுடைய காளி அம்மன் வாக்குப்பெற்ற இந்தியப் பரம்பரை ஜோதிடர் யாழ். வருகைதந்துள்ளார். கைரேகை, ஜாதகம், எண்கணிதம், மகப்பேறு, குடும்பப்பிரச்சினையா? கல்வி, வெளிநாடு செல்லத்தடையா? தொழிற்பிரச்சினையா? காதல் பிரச்சினையா? திருமணப்பிரச்சினையா? தீராதநோயா? எந்தவிதமான பிரச்சினைகளுக்கும் தக்க பரிகாரம் மூலம் தீர்வுகாணலாம்.

ஒரு முறை விஜயம் செய்து பாருங்கள்!
இரண்டாவது தடவையாக விஜயம் செய்துள்ளார்.

**மணிசாமி P.T.R ஈஸ்வரி அம்மா**

யாழ். உல்லாசப் பயணிகள் விடுதி. (பழைய லிங்கம் கூல்பார் அருகில்).
இல. 54, மனிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம் (வெலிங்டன் சந்தி அருகில், பெருமாள் கோயிலடி.)

பார்வையிடும் நேரம் : காலை 9.00 மணிமுதல் மாலை 4.00 மணிவரை.

(16-18-29) (21786)



## G.A.Q. யாழ்., பேராதனை 2004,2005
(வெளிவாரி)

A/Lஇல் கணிதம், விஞ்ஞானம், வர்த்தகம், கலை ஆகியவற்றில் 3பாடங்கள் சித்தியடைந்தவர்களும் பயிற்றப்பட்ட ஆசிரியர்களும் இப்பாடநெறிகளுக்கு விண்ணப்பிக்க தகுதியுடையவர்களாவர்.

※ இதற்குரிய பல்கலைக்கழகப் பதிவுகள் எம்மால் செய்து தரப்படும்.
※ இதற்குரிய விரிவுரைகள் ஆரம்பம்: 30. 08. 2003 8 மணி

**புதிய உயர்கல்லூரி,**
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.

*விவரங்களுக்கு:*
அருள்நங்கை (21854) (26-12-15)



## றெனி பல்+மூக்குக்கண்ணாடி அகம்

☆ கண்களைப் பரிசோதித்து கண்ணாடி பெற்றுக்கொள்ள,
☆ உறுதியான பற்களைக் கட்டிக்கொள்ள,
☆ மிதப்புப் பற்களுக்கு 'கிளிப்' போட்டுக்கொள்ள

நீங்கள் நாடவேண்டிய இடம்:

றெனி பல், மூக்குக்கண்ணாடி அகம்

இல. 540, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

பிரதான வீதி,
(வேலாயுதம் பாடசாலைக்கு அருகில்)
பருத்தித்துறை.

T.P. 3703
(சி-29782) (26-16-18-29)



## விற்பனையாகின்றன!

முதல் முறையாக இலங்கையிலிருந்து
பல்சுவை அம்சங்களுடன்....

**இலங்கை விகடன்**

யாழ்நகரில் கிடைக்கும் இடம்:

ஸ்ரீலங்கா புத்தகசாலை
234, கே.கே.எஸ்.றோட்,
யாழ்ப்பாணம்.

ஸ்ரீலங்கா புத்தகசாலை
(நல்லூர் சிவன் கோயில் முன்)
நல்லூர்.

☎ 222 2573

மேலதிக தொடர்புகளுக்கு:
றொகான் வீடியோ சென்ரர்,
ஈச்சமோட்டை. T.P. 3301 (12-) (C29779)


## நல்லை ஆதீனத்தில் இன்றும் நாளையும் இசை நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஓக.26

நல்லூர்க் கந்தன் உற்சவத்தையொட்டி நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம் நடத்தும் இசை நிகழ்வுகள் இன்றும், நாளையும் காலை 9 மணி முதல் பிற்பகல் 3 மணி வரையும் ஆதீன மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

இரதோற்சவ தினமான இன்று காலை 9 மணிக்கு பஞ்சபுராணமும் 9.30 மணிக்கு வி. சிவஞானசேகரத்தின் இசைக்கச்சேரியும், 10.15 மணிக்கு செல்வி வேல்விழி சிவசுப்பிரமணியத்தின் இசைக்கச்சேரியும் முற்பகல் 11 மணிக்கு திருமதி மல்லிகா குணபூசனம் நாகராசாவின் இசைக்கச்சேரியும் 11.45 மணிக்கு எஸ்.சிவஞானராசாவின் இசைக்கச்சேரியும் இடம்பெறும்.

பிற்பகல் 12.30 மணிக்கு செல்வன் மனோகரன் லக்ஸ்மன், செல்வன் மனோகரன் யுவன்சன் ஆகியோரின் காவடி ஆட்டமும் ஒரு மணிக்கு செல்வி மஞ்சுளா விநாசித்தம்பியின் இசையரங்கும், 1.45மணிக்கு கதிர் சுந்தரலிங்கத்தின் பாட்டும், 2.30 மணிக்கு எஸ்.சிவசண்முகமூர்த்தி குழுவினரின் கதாப்பிரசங்கமும் நடைபெறவுள்ளன. (எ-10)

## கடைகளுக்கு சுருக்குக் கதவுகள் பொருத்தப்படவில்லை

தென்மராட்சி,ஓக.26

சாவகச்சேரி நவீன சந்தை மேல் மாடியில் உள்ள 40 கடைகளுக்கு இன்னமும் கதவுகள் பொருத்தப்படாததால் தமது வியாபாரத்தை ஆரம்பிக்கமுடியவில்லை என வர்த்தகர்கள் தெரிவித்தனர்.

யுத்தத்தினால் சேதமடைந்த நவீன சந்தை கடைத்தொகுதிக் கட்டடம் வடக்கு புனர்வாழ்வு புனரமைப்பு அதிகார சபையினால் ஒரு கோடி ரூபா செலவில் புனரமைக்கப்பட்ட போதிலும் இக்கடை அறைகளுக்கான சுருக்குக் கதவுகள் பொருத்தப்படாததால் கடைகளைத் திறக்கமுடியவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

தரைமாடியில் உள்ள நாற்பது கடைகளில் பெரும்பாலானவை வியாபாரத்தினை ஆரம்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-117)


## விற்பனைக்கு

கொழும்பில் இருந்து கொண்டுவரப்பட்ட புதிய சுருக்குக் கதவுகள் முன்பக்க தகடுகள், 19 கேஜ் பொருத்தப்பட்டது.

16 X 9½ (இரண்டு கதவுகள்)
8 X 9½ (ஒரு கதவு) சதுர அடி 325/=

பாவனையிலுள்ள WINDOW TYPE AIR CONDITION ரூபா 15000/=, புதிய மரக்கடைச்சல் இயந்திரம் 12000/= விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:-
இல. 41, நாயன்மார் வீதி,
நல்லூர்.
T.P. 0777 344530 (21848)



## சுலபமாக - சொகுசாக - சிக்கனமாக

# சிங்கப்பூர் சுற்றுலா

யாழ்ப்பாணத்திலிருந்து 1 நாளில் சிங்கப்பூர்!

31-8-2003 இல் எக்ஸ்போ எயர் விமானம் மூலம் இரத்மலானை செல்ல.
01-09-2003 இல் SQ401 மூலம் 1.35 மணிக்கு சிங்கப்பூர் செல்ல.

❑ யாழ்ப்பாணம் - இரத்மலானை - கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையம் - இலவச தொடர்பு கட்டுநாயக்கா - இரத்மலானை - யாழ்ப்பாணம்.
❑ சிங்கப்பூர் - தங்கும் Summer View Hotel - சிங்கப்பூர் இலவச போக்குவரத்து.
❑ Summer View Hotel 3 நாள் இலவச தங்குமிட வசதி (ஒரு அறை - பதிவு வேண்டும் - இருவர்/மூவர்)
❑ காலை உணவு இலவசம்.

04-09-2003 - சிங்கப்பூர் விமான நிலையம் - 19.00 மணி
05-09-2003 - பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையம் எக்ஸ்போ எயர் மூலம் மு.ப. 11.45 இற்கு பலாலி விமான நிலையம்.

இத்தனை வசதிகளுடன் கூடிய உல்லாசப் பயணம் செய்வதற்கு -
போக்குவரத்துக் கட்டணம் : ரூபா 45,750 - (ஒருவருக்கு)
ரூபா 30,000 - (சிறுவர்களுக்கு தனிப்படுக்கை இல்லை)
ரூபா 37,000 (சிறுவர் - தனிப்படுக்கை வசதி)

சிங்கார் சீமையில் சொர்க்கம் போன்ற அழகு மிகு இடங்களுக்கு சுற்றுலா செல்ல வசதிகள் செய்து தரப்படும். இவற்றுக்குரிய கொடுப்பனவுகளை நீங்களே செய்யவேண்டும்.

இனி ஏன் தயக்கம் - சகல விவரங்களுக்கும் உடனே தொடர்புகொள்ளவும்.

COS MOS MARKETING SERVICES,
200, K.K.S. ROAD,
JAFFNA. T.P - 222-5461.

(C/29785) (32-16-18-29)


# கண்ணீர் அஞ்சலி



சாவகச்சேரி வடக்கு, சாவகச்சேரியைச் சேர்ந்த
திருமதி
**காசித்தம்பி நாகலிங்கம் பொன்னம்மா**
அவர்கள் காலமானதையிட்டு அன்னாருக்கு கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாகச் சமர்ப்பித்து துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து ஆத்மா சாந்தி பெற ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

- ஆஸ்திரேலியா, நோர்வே, பிரான்ஸ்,
வாழ். நண்பர்கள்.

(21860) (25-16-18-29)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி காசித்தம்பி நாகலிங்கம் பொன்னம்மா

சாவகச்சேரி வடக்கைச் சேர்ந்த திருமதி காசித்தம்பி நாகலிங்கம் பொன்னம்மா அவர்கள் நேற்று (25.08.2003) திங்கட்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் சாவகச்சேரி வடக்கு, காலஞ்சென்ற காசித்தம்பி நாகலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும் இரத்தினம், சோமசுந்தரம், பேரம்பலம் (ஆஸ்திரேலியா), திருமதி மகேஸ்வரி நவநீதராஜா (ஆஸ்திரேலியா), அருளம்பலம் (முன்னாள் ஓய்வுபெற்ற உப அதிபர்,கொழும்பு விவேகானந்தக் கல்லூரி), யோகமூர்த்தி (நோர்வே) ஆகியோரின் அன்புத் தாயாரும் தெய்வானை, காலஞ்சென்ற சின்னாச்சி, இரத்தினபூபதி, நவநீதராஜா (ஆஸ்திரேலியா), புஸ்பராணி (ஆஸ்திரேலியா), சிவயோகம் (நோர்வே) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆறுமுகம் அவர்களின் (பெறாமகன்) தாயாரும் சிவக்கொழுந்துவின் மாமியாரும் காலஞ்சென்ற சிவா-சிவஞானச்சந்திரன், பாலு, றஞ்சி, சிவநேசன், ராணி, ரஜனி, றூபன் (நோர்வே), மனோகரன், கருணாகரன், பாமதி, ஸ்ரீகரன், சிவமதி, இரவீந்திரன், கலைமதி, றஜனி, நந்தினி, குமுதா, றூபா, சுஜா, ஜெயவாணி (ஆஸ்திரேலியா), குகதாசன், சிவதாசன், யோகதாஸ், கோகுலவாணி, சத்திதாஸ் (ஆஸ்திரேலியா), குகப்பிரியா, கோகிலப்பிரியன், நிஷ்யா (நோர்வே), நெலோசா (நோர்வே) ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் காளிகோவில் வீதியிலுள்ள சோமசுந்தரம் மனோகரன் அவர்களது இல்லத்தில் இன்று (26.08.2003) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் மீசாலை கிழக்கு, கொற்புலம் மயானத்துக்கு அக்கினி சங்கமத்துக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திரு.திருமதி நவநீதராஜா
(மருமகன்-ஆஸ்திரேலியா)

(21859)(29-16-18)

## இராமநாதர் ஆறுமுகம் கோவிந்தபிள்ளை
(ஓய்வுபெற்ற ஆசிரியர், காரைநகர்)

காரைநகர், முல்லைப்புலவைச் சேர்ந்த இராமநாதர் ஆறுமுகம் கோவிந்தபிள்ளை அவர்கள் நேற்று (25.08.2003)திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காரைநகர், முல்லைம்புலவு இராமநாதர் ஆறுமுகம்-சின்னக்குட்டி தம்பதிகளின் இளையமகனும் காரைநகர் கலாநிதி ஆ.தியாகராஜா மத்திய மகாவித்தியாலய ஓய்வுபெற்ற ஆசிரியரும் அன்னபூரணத்தின் அன்புக் கணவரும் குமரன் (பொறியியலாளர்,DIALOG GSM) அவர்களின் பாசமிகு தந்தையாரும் காலஞ்சென்ற கந்தையா (பிரதம சிறாப்பர்), கயிலாயபிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரரும் திருமதி காமாட்சி சுப்பிரமணியம் (கனடா), திருமதி பரமேஸ்வரி மகேசன் (ஓய்வுபெற்ற ஆசிரியை) ஆகியோரின் அருமை மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.08.2003) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி கோ.அன்னபூரணம் (மனைவி),
கோ.குமரன் (மகன்).

*71, செட்டித் தெரு,*
*நல்லூர்.*
(21855)(16-18-29)

# நாட்டில் குற்றச்செயல்களைத் தடுப்பதற்கு ஊடகவியலாளர் - பொலிஸார் உறவு அவசியம்

## அட்டன் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்

அட்டன்,ஓக.26

பொலிஸாருக்கும் ஊடகத்துறையினருக்கும் இடையில் நல்லுறவு ஏற்படுவதன் மூலம் சமூகத்தில் குற்றச் செயல்களைக் குறைக்கமுடியும்.

- இவ்வாறு அட்டன் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சிசில் பெரேரா தெரிவித்தார்.

அட்டன் பிரதேச ஊடகவியலாளர்களுடனான சந்திப்பு கடந்த சனிக்கிழமை அட்டன் தொண்டமான் தொழில் பயிற்சி நிலையத்தில் இடம பெற்றது. இச்சந்திப்பில் உரையாற்றும்போதே சிசில் பெரேரா இவ்வாறு தெரிவித்தார்.

அட்டன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பொலிஸ் நிலையங்களைச் சேர்ந்த பொறுப்பதிகாரிகளும் இச்சந்திப்பில் கலந்துகொண்டார்கள்.

சிசில் பெரேரா அங்கு தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

"ஊடகத்துறையைச் சார்ந்தவர்கள் மதிக்கப்பட வேண்டும். அவர்கள் சமூகத்தின் பிரச்சினைகளை அன்றாடம் அவதானித்து அவற்றை ஊடகங்களின் மூலம் வெளிப்படுத்துகிறார்கள்.

எனவே, பொலிஸாருக்கும் ஊடகவியலாளர்களுக்குமிடையில் நல்லுறவு நிலவும்போது குற்றச் செயல்களைத் தடுக்கமுடியும்.

அட்டன் பிரதேசத்தில் நிலவும் சுகாதாரச் சீர்கேடுகளைப் போக்க அட்டன் - டிக்கோயா நகரசபைத் தலைவர் மற்றும் அம்பகமுவ பிரதேச சபைத் தலைவர்களுடன் பேசி, பொலீஸாரும் இணைந்து தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

சிவனொளிபாதமலை யாத்திரைக் காலத்தில் குற்றச்செயல்களைத தடுக்கவும், அட்டன் பிரதேசத்தில் கசிப்பு உற்பத்தி உட்பட போதைப் பொருள் பாவனையை ஒழிக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும். ஊடகத் துறையைச் சார்ந்தவர்கள் எமக்குப் பூரண ஆதரவை வழங்க வேண்டும்.

எமது பொலிஸ் நிலையங்களில் ஊடகவியலாளர்களுக்குத் தேவைப்படும் விவரங்களைத் தாமதமின்றி வழங்குமாறு கேட்டுள்ளேன்.

பொலிஸாரின் சேவை, செயற்பாடுகள் தவறான முறையில் அமையும் போது பொதுமக்கள் வெறுப்படைந்து விடுகின்றார்கள். இத்தகைய முரண்பாடுகளைத் தடுப்பதற்கு ஊடகத்துறையினரின் பங்களிப்பு அவசியமாகின்றது. அதைத் தகுந்த முறையில் கொண்டு செல்லத் தயாராக இருக்கின்றோம். எனது பதவிக்காலத்தில் எம்மிடையில் அந்நியோன்னியம் நிலவ தேவையான நடவடிக்கை எடுப்பேன் - என்றார்.

(எ)

# சிறுவர்களின் 'ஆஹா' நிகழ்ச்சிக்கு 'பொங்குதமிழ்' ஏற்படுத்திய பங்கம்

கொழும்பு,ஓக.26

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற சிறுவர்களின் 'ஆஹா' கலை நிகழ்ச்சிகளுக்கு 'பொங்குதமிழ்' சாயம் பூசப்பட்டதால் சிங்கள இனவாத அரசியல் கட்சித் தலையீடு, பாதுகாப்புக் கெடுபிடி ஆகியவற்றால் சிறிது பங்கம் ஏற்பட்டது.

கனடாவில் உள்ள பாரதி ஆர்ட்ஸ் கழகத்தினர் தமது இலங்கைக் கிளையுடன் சேர்ந்து கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் 'சுடர் ஒளி' அனுசரணையுடன் ஆஹா கலை நிகழ்ச்சிகளை நடத்தினர். கலை நிகழ்ச்சிகளை அளித்தவர்கள் 5 முதல் 15 வயது வரையிலான சிறுவர்கள் ஆவர்.

இந்த நிகழ்ச்சிகள் புலிகளின் 'பொங்குதமிழ்' நிகழ்ச்சிகள் என்ற விஷமப் பிரசாரத்தில் சிலர் ஈடுபட்டதால் சிங்கள இனவாதக் கட்சியான சிஹல உறுமய கிளர்ந்து எழுந்தது.

'பொங்குதமிழ்' என்றால் பாதுகாப்புப் படையினர் சும்மா இருப்பார்களா?

நிகழ்ச்சிகளின் ஏற்பாட்டாளர்கள் அசைந்து கொடுக்கவில்லை. கடைசியில் பொலிஸ் பாதுகாப்புடன் சிறுவர்களின் 'ஆஹா' கலை நிகழ்ச்சிகள் வெகுஜோராக நடைபெற்றன. 'பொங்கு தமிழ்' பூச்சாண்டி பலிக்கவில்லை.

# பிரதமர் நாட்டைக் கொண்டு செல்லும் பாதை சரியானதென உலகநாடுகள் ஏற்றுள்ளன

## அமைச்சர் இம்தியாஸ் தெரிவிப்பு

பேருவளை,ஓக.26

"யாருமே எதிர்பார்த்திராதவேளையில் இலங்கையின் அபிவிருத்திப் பணிகள் நாடளாவிய ரீதியில் அரசாங்கத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அடுத்த வருட நடுப்பகுதியில் ஜப்பான் நாட்டு நிதியுதவி மூலம் மேலும் பல வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டு பூர்த்திசெய்யப்படும்."

இவ்வாறு மக்கள் தொடர்பாடல் அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர்மாக்கார் பேருவளையில் தெரிவித்தார்.

ஒரு கோடியே மூன்று லட்சம் ரூபா செலவில் பேருவளை நகர சபையின் வழிகாட்டலின் கீழ் செயற்பட்டு வந்த வீதி அபிவிருத்தி வார வேலைத்திட்டப் பூர்த்தி விழா கடந்த வியாழக்கிழமை இரவு பேருவளை மஹகொடையில் இடம்பெற்றது. அந்த விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும்பொழுதே அமைச்சர் இம்தியாஸ மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

பேருவளை நகரசபை உறுப்பினரான எம்.எப்.எம்.ஹஸன் தலைமையில் இடம்பெற்ற இவ்விழாவில் அமைச்சர் உரையாற்றும்போது மேலும் தெரிவித்ததாவது:-

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நாட்டைக் கொண்டு செல்லும் பாதை சரியானதே என இன்று பெரும்பாலான உலக நாடுகள் ஏற்றுக்கொண்டுள்ளன. அதன் பயனாக அந்த நாடுகள பெருமளவிலான உதவிகளையும் ஆதரவுகளையும் வழங்கி வருகின்றன.

இன்று சுற்றுலாப் பயணிகளின் வருகை நாட்டில் அதிகரித்துள்ளது. பல உலக நாடுகள் பிரதமர் மீதும் இலங்கை மக்கள் மீதும் நம்பிக்கை வைத்து பல அபிவிருத்தித் திட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள இணக்கம் தெரிவித்துள்ளன. பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இலங்கையை சரியான பாதையில் இட்டுச் செல்வதால் அபிவிருத்தித் திட்டப் பணிகள் சரியான முறையில் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

உலக சுற்றுலாதினம் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 27ஆம் திகதி அனுஷ்டிக்கப்படுகிறது. இதனையும் பேருவளையில் நடைமுறைப்படுத்தவுள்ளோம். இதற்கு சுற்றுலாத்துறை அமைச்சரின் அனுமதியும் கிடைத்துள்ளது. நீர்ப்பாசன வாரத்தையும் பேருவளையிலேயே மேற்கொள்ளவுள்ளோம்.

அமைச்சர்களான எஸ்.பி.திசாநாயக்க, மொஹமட் மஹ்ரூப், மஹிலால் பெர்னாந்து ஆகியோர் பேருவளை நகர அபிவிருத்தித்திட்டப் பணிகளுக்கு பெருமளவிலான உதவிகளை வழங்குவதாக வாக்களித்துள்ளனர். இப்படி அவர் தனதுரையில் தெரிவித்தார்.

பேருவளை நகரபிதா மஸாஹிம் முஹம்மத், மேல்மாகாண சபை உறுப்பினர்களான ஜயந்த குணவர்த்தன, ஏ.எம்.யூசுப் ஆகியோரும் இவ்விழாவில் உரையாற்றினர். (எ)

# கைத்தொழில் கண்காட்சி தொடர்பான கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஓக.26

வடக்கு - கிழக்கு மாகாண தொழில் துறைத் திணைக்களத்தால் மாகாண மட்டத்தில் நடத்தப்படவுள்ள 'புத்துலக பிரதேசம்' என்ற கைத்தொழில கண்காட்சியில் பங்குபற்றுவோருக்கான முக்கிய கலந்துரையாடல் நாளை புதன்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு யாழ். செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கண்காட்சியில் கைத்தொழில் பொருள்களை காட்சிப்படுத்த விரும்பும் அனைவரையும் இந்தக் கலந்துரையாடலில் தவறாது கலந்து கொள்ளுமாறு தொழிற்துறைத் திணைக்கள மாவட்ட அலுவலர் கேட்டுள்ளார்.

இந்த மாகாணமட்ட புத்துலகப் பிரவேசக் கண்காட்சி அடுத்த மாதம் 27ஆம் திகதி முதல் மூன்று தினங்கள் யாழ் வைத்தீஸ்வராக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. (ம-5)

# 'மன இறுக்கம்' நோய்க்கு மருந்து தேடல் தொடர்கிறது

பழைய கால தமிழ் இலக்கிய நூல்கள் ஒரு பெண்ணின் வாழ்க்கைப் பருவங்களை, பல்வேறு வகைகளாக எமக்குப் பிரித்துக் காட்டுகின்றன. பெண்ணின் ஐந்து வயதுக்கு முன்னரான நிலைமையை பேதைப் பருவம் என்றும், பன்னிரெண்டு வயது வரை பெதும்பைப் பருவம் எனவும், அவள் பதினாறு வயதை எட்டும் போது மங்கையென்றும், இருபத்தியொரு வயதுக் காலம்வரையான அந் நிலையை மடந்தை நிலையென்றும், இருபத்தியேழுவரை அரிவை எனவும், முப்பத்தைந்துவரை தெரிவை எனவும், இதற்குமேல் வரும் பருவ நிலையில், பேரிளம் பெண் எனவும் கோடிட்டு விளக்குகின்றன். இத்தனை பருவங்களுள்ளும் புளகாங்கித உணர்வை அள்ளித்தரும் அந்தக் கிளர்ச்சிமிக்க காலமென்றால், அது எது?

அது, சின்னஞ்சிறுமியாகத் துள்ளித்திரிந்த காலம் மாறி, வயதுவந்த மங்கையென மகிழும் அப்பருவமே! பெண்ணின் சரீரத்தில் மாதவிடாய்க்கான ஹோர்மோன்கள் அதிசயிக்கத்தக்க ஜாலங்கள் புரியும் காலமும் அதுவே! இனவிருத்தியை முனைப்போடு கொண்டெடுத்துச்செல்ல, இயற்கை பல நாடகங்களை அரங்கேற்றி முடிக்கும் பொன்னான நினைவுகளைப் பொதிந்து நிற்கும் சுவாரஷ்ய மிக்க பருவமுமிதுவே.

செக்ஸ் உணர்வுகளைத் தட்டியெழுப்பிப் புணரும் நிலையை உருவாக்கித், தன் காரியத்தைத் திறம்பட நடத்திச், சந்ததியைப் பெருக்கும் யுக்தி தன்னைச்செயலாக்கும் அரும்பெரும் பருவம் இதுவே தான்!! சந்தனமும் மஞ்சளும் அவள்மேல் கொட்டி, அவள் சுற்றம் குதூகலித்துக் கும்மாளமடிக்கும் அந்த நன்னாளான, அவள் பெரியவளாகும், அத்தினம் என்றென்றும் அவளால் மறக்க முடியாத பெருநாளாகும். இந்நாளிலிருந்து சுமார் 30 வருடங்களுக்குத் தான் குழந்தையைப் பெற்றெடுக்க லாய்க்குள்ளவள் என்பதைப் பெருமிதத்துடன் உலகுக்குப் பறை சாற்றும் நன்னாளாகவும் இந்நாள் அமைந்து நிற்கும்.

ஒரு குழந்தையின் ஜனன உற்பத்திக்கென, இயற்கை ஆக்கித்தந்துள்ள உற்பத்திச்சாலையாக ஒரு மங்கையின் கருப்பை, அவளின் இரு சினைப்பைகள், கருப்பைக்குழாய்கள், வஜினா எனப்படும் கருப்பையை அடைவதற்கான வாய்க்கால், கருப்பைக்கழுத்து எனப்படும் சேர்விக்ஸ், இடுப்பெலும்பு என்ற எலும்புக் கவசம் என்பன மங்கையவள் இந் நிலையை எட்டுவதற்குத் துணை புரியும் துணை உறுப்புகளாகும். இவை மட்டுமன்றி, அப்பெண்ணின் சினைப்பையிலிருந்து ஊற்றெடுக்கும் ஹோர்மோன்கள் புரியும் நர்த்தனங்களால், கருவறையிலும் சரி, அவள் தேக மெங்கனுமேயும் சரி, ஏற்படும் திடீர் மாற்றங்களை விபரிப்பதற்கே வார்த்தைகள் போதாது. மாதாமாதம் சினை முட்டைகளில் ஒன்று, சினைக்கூடு வெடித்தமாத்திரத்திலேயே வெளியேறுகிறது.

ஒரு சிறு புள்ளிபோல காட்சி தரும் இக்கருமுட்டை, காலப்போக்கில் ஆணுடைய உயிரணுவுடன் சேர்ந்து மனிதகுலமே உருவாவதற்கான தனது பங்கை ஆற்றப்போகிறது. இத்தனை தன்மைவாய்ந்த இந்தக் கலம், தன்னுடைய இருப்பிடமாகிய சினைக்கூட்டில் வாழ்ந்து வரும் காலத்திலென்றாலென்ன, தன் சுயம்வரத்தைத் தொடரும் காலப் பகுதியிலென்றாலென்ன, பின்னர் கருவாக வளர்ச்சிபெற்று மிளிரும் போதும் தான் என்ன, தன்னுடைய ஒவ்வொரு நொடி நல்வாழ்வுக்கும் அபரிமிதமாகத் தன்மேல் பொழியப்படும் ஹோர்மோன்களின் செயல்பாட்டிலேயே தங்கி நிற்க வேண்டியுள்ளது. அவற்றின் தாராள மனப்பான்மை இல்லையேல், மனிதகுலம் தழைத்தோங்க வாய்ப்பேயில்லை.

பலசந்தர்ப்பங்களில் கருக்கட்டுவது கைகூடாதுபோனாலும்கூட, இனி வரும் காலத்தில் உண்டாகப்போகின்ற குழந்தையை எங்கெனம் வளர்த்தெடுப்பது என அங்கலாய்த்து அதற்கான ஒத்திகையை மாதாமாதம் கிரமமாக செயற்படுத்தும் கைங்கரியமும் இதே பாணியில், இதே ஹோர்மோன்கள் ஊடாகவே நடந்தேறி முடிவுறுகிறது. அதுமட்டுமன்றி, இச் சுரப்புகள் நிர்ணயிக்கப்பட்ட எல்லையைத்தாண்டி, மேலும் அதிகரிப்பதோ, அன்றேல் அருகிக்காண்பதாகவோ அமையின், அவளது சரீரம் பல சிக்கல்களை அனுபவிக்க நேரிடும். இந்தப்பின்னணியை வைத்தேதான் நாம் மாதர்களில் ஏற்படும் மன இறுக்கம் எனும் நோயை, அலசி ஆராய்கிறோம்.

நிர்மலமான வானில் திடீர் திடீரென கார்மேகம் சூழ்ந்து, பளீர், பளீர் என மின்னல் மின்னி, இடி இடித்துப், பேய்க்காற்றுவீசி, கொட்டுகொட்டென மழைபொழிவதை நாம் பார்த்திருக்கிறோம். இது போன்ற பிரளயமே ஒரு மங்கையின் வாழ்வில் ஏற்படுவதுபோன்ற நிகழ்வையே, மன இறுக்கம் எனும் நிலைமை எமக்கு நினைவுபடுத்துகிறது. மாதவிடாய் கண்ட நாள் முதலாய், சுமார் 15 நாள்களுக்கு அப்பாவியாக, அன்புக்குரியவளாக, பெண்மைக்கே இலக்கணமாக வாழ்ந்து வரும் அப்பெண், சுமார் 16ஆவது நாளை அண்மித்ததுமே, உன்மத்தம் பிடித்தவளாய், சந்தேகம், சிடுசிடுப்பு, அகங்காரம், பேராசை, ஆக்ரோஷம் கொண்டவளாக போர்க்கோலம் தொடுக்கும் மர்மம்தான் என்ன? இந்த ஹோர்மோன்களின் மாற்றத்தால் அலலலுறும் இப்பெண், இவற்றை மட்டும் சந்திப்பதில்லை! அவளின் நல்வாழ்வையே நாசமாக்கத்திட்டம் தீட்டுவது போல வேறு பல அசௌகரியங்களும் கூட, இக்காலகட்டத்தில் அவளை வந்தடையக் காத்து நிற்கும்!




நாரிப்பிடிப்பு, சரீர பருமன், மார்பக பாரம், மார்பக நோவு, பசியின்மை, மலபந்தம், தலைச்சுற்று, அறிவுகெடல், தலையிடி, எலும்புநோவு, நித்திரையின்மை, சக்தியற்ற நிலைமை, வாந்தி, அரோஜிகம், தோல்புரை நோய்கள், இளையங்களில் வீக்கம், பொருத்துக்களில் தாபிதம், அதிபாரம் என்பன போன்ற சரீர விகற்பங்களும் சிடுசிடுப்பு, அதிகோபம், தடதடப்பு, மனச்சோர்வு, நரம்புத் தளர்வு போன்ற சுபாவ மாற்றங்களும் மனக்கலக்கம், புலன் செல்லாமை, ஞாபக மறதி போன்ற மனத்தைப் பற்றிய தாக்கங்களும் மேலும் மேலும் அவளைத் துன்புறுத்திய வண்ணமே நிலை கொண்டு நிற்கும்.

எனினும், இத்தனை உக்கிரத்தைக் காட்டி அசுர தாண்டவம் ஆடி குடும்பங்களையே பிரித்துக்கூத்துப் பார்க்கும் இந்நோய் அடுத்துவரும் மாதவிடாயின் தோற்றத்தைக் கண்ட மாத்திரத்திலேயே பகலவனைக் கண்ட பனிபோல 'கப் சிப்' என்று அடங்கி பெட்டிப் பாம்பு சுருங்குவது போல தனது நாளாந்த இயற்கையான வாழ்வைத் தொடர அவகாசத்தை நல்குமெனினும், 'பழைய குருடி கதவைத் திற' என்பதற்கிணங்க தனது கோர நாடகத்தை மீண்டும் நடத்த நாள்களை எதிர்பார்த்துக் காத்து நிற்கும் மாதவிடாய் மீண்டும் வருவதற்கு சுமார் 2கிழமைகள் அண்மிக்கத் தொடங்கியதும் அதே பயங்கரத்தோடு, தன் அதே அகோர தாண்டவத்தை இது வெளிப்படுத்தத் தொடங்கிவிடும்.

இந்நிலையைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவருவதற்கான வழிவகைகள் பல நடைமுறை வழக்கில் அமைந்துள்ளனவாயினும்கூட இவ்வியாதியை சரிவர இனங்கண்டு பூரணமான நற்சுகத்தை நோயாளிகளுக்கு நல்க மருந்து வர்க்கங்கள் எதுவும் கண்டுகொள்ளப்படவில்லை. ஹோர்மோனகளின் நிலையை இயற்கையில் நிலவும் விகிதாசார நிலைப்பாட்டுக்குக் கொண்டுவருவதற்காக கருத்தடை மாத்திரைகளும் சீர குறைபாடுகளைத் தீர்க்க விற்றமின் மாத்திரைகளும் குறிப்பாக பிறிடொக்சின் எனும் வர்க்கமும், வியாதியின் மூர்க்கத்தனத்தை கட்டுக்குள்கொண்டுவர மனச்சாந்தி மருந்துகளும் அதே நேரத்தில் தியானம் போன்ற மனத்தை திசை திருப்பும் பல முயற்சிகளும் ஆங்கில மருத்துவ அணுகுமுறைகளில் கைக்கொள்ளப்படுகின்றன. இது பற்றிய ஆய்வுகள் பல கோணங்களில முடுக்கி விடப்பட்டிருப்பினும் பலன் பூஜ்ஜியமாகவேயுள்ளது.

இயற்கை காட்டும் இயற்கைக்கு மாறான இத்தோற்றங்கள் இயற்கையே எமக்குத் தந்துள்ள வனப்புமிக்க சக்தி வாயந்த தாவரங்களின் தூண்டுதலால், சாதாரண நிலைக்குத் திரும்புவதற்கு வாய்ப்புள்ளதா? மூளையின் சுளிவு நெளிவுகளிலெல்லாம் புகுந்து தன் சுகந்தத்தைப் பரப்பி தாங்கொணா இறுக்கத்தைக் காட்டும் இப்பாகங்களுக்கு மணம் பரப்பும் வாசனை மருத்துவத் திரவியங்கள் இதமாக அமையுமா? அமையும் என்கிறார்கள் சில மருத்துவ வல்லுநர்கள். "றோஜா மலர்கள் அழகும் வனப்பும் கொண்டவை மாத்திரமல்ல, அவற்றிலிருந்து வெளிவரும் சுகந்தமோ, மனஇறுக்கமுள்ள நோயாளருக்கு பெரும் ஆறுதலை நல்கவல்லன என்கிறார்கள் இவர்கள்! இதைப் போலவே மாதுளம்பூவும் இதற்காகப் பயன்படுவதாக மூலிகை சாத்திரவல்லுநர்கள் கூறுகின்றனர்.

சித்த மருத்துவ அறிஞர்களோ இவ்வியாதி ஏற்படுவதற்கு அபாண வாயுவின் அபரிமிதமான செயலே காரணமெனவும் அவ்வாயுவின் அதிவேக சக்தியானது ஜனன உறுப்புகளூடே அதிகளவு செலுத்தப்படும் போது ஏற்படும் நிகழ்வே இந்த மன இறுக்கத்தைத் தருவதாகவும், அபிப்பிராயப்படுகின்றனர். அதனைக் கட்டுப்பாட்டில் கொண்டுவரும்போது இந் நோய் கட்டுக்குள் அடங்குவதாகவும் குறிப்பிட்டுள்ளனர். தியானத்தின் மூலம இதனைக் கட்டுப்படுத்த முடியும் என விளக்கும் இத்துறையில் கை தேர்ந்தவர்களோ மனதில் எழுகின்ற எண்ணங்களே எம்மை அவைக்கு அடிபணியச் செய்கின்றன என்றும் அதனைத் திசை திருப்பிக்கொள்வதற்கு தியானம் ஒரு மார்க்கமாக அமைவதாகவும் விளக்குகின்றனர்.

**சில்லாலை சித்த மருத்துவ கலாநிதி அல்போன்ஸஸ் அத்தனாசியார்**

ஹோமியோபதி மருத்துவரோ இதற்கான சிகிச்சையாக எட்டிவிரை பல்சற்றிலா, இக்னேசியா, லைக் கோப்போடியம் எனும் மருந்து வர்க்கங்களை உபயோகித்து இதற்கான சிகிச்சையை அளித்து வருகின்றனர். சீன மருத்துவத்தைக் கையாள்பவர்களோ இஞ்சி, அதிமதுரம், புதினா போன்ற இயற்கை மருந்து வர்க்கங்கள் இதனைக் கட்டுப்பாட்டில் கொண்டு வருவதற்கு உதவுவதாகக் கூறுகின்றனர். இப்படியே மனிதனின் வாழ்வு தொடங்கிய காலம் முதலாய் இப் பொல்லாத வியாதிக்கான மருந்தின் தேடல் தொடர்ந்துகொண்டே வருகின்றது. ☆

## சின்னஞ்சிறு விளம்பரம்

### வீடு விற்பனைக்கு

சுண்டுக்குளி, கொழும்புத்துறை வீதியில் சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, சென்ஜோன்ஸ் கல்லூரிகளுக்கு அருகில் 51/2 பரப்புக் காணியுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு தொடர்பு: 50/7(38), கொழும்புத்துறை வீதி, விதானையார் வீதிக்கு அருகில், சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். (21841)

### புறொயிலர் விநியோகம்

N.L.I.B இன புறொயிலர் குஞ்சு ரூபா 47/- சிவப்பு நிற சேவல் குஞ்சு ரூபா 8/- பதிவுசெய்தவர்களும் தேவைப்படுவோரும் 26-08-2003 இன்று மாலை பெற்றுக்கொள்ளலாம் தொடர்பு: வி.குணபாகன், இல.4, கொழும்புத்துறை வீதி, சுண்டுக்குளி. (21845)

### போட்டிப் பரீட்சை(SSO)

அபிவிருத்தி உத்தியோகத்தருக்கான போட்டிப் பரீட்சைக்குரிய பொது அறிவும் நுண்ணறிவும் என்னும் நூல வெளிவந்துள்ளது. யாழ்.பிரபல புத்தகசாலைகளிலும் கொழும்பிலும் பெற்றுக் கொள்ளலாம். விலை ரூபா 120. பிரபல ஆசிரியர் கே.கமலதாசன். (21704)

### தவறிவிட்டது

வேலுப்பிள்ளை ரதீஷன் என்பவருடைய வேலை அடையாள அட்டை, விசேட அடையாள அட்டை (09030115887), சாரதி அனுமதிப்பத்திரம் (A006450652) என்பன சங்கானைக்கும் சுழிபுரத்திற்கும் இடையில 09-08-2003இல் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, சங்கானை என்னும் முகவரியில் ஒப்படைககவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (21719)

---

## வேலையாள்கள் தேவை

புதிதாக ஆரம்பிக்கவிருக்கும் ஹோட்டல் ஒன்றுக்கு கீழ்வரும் வேலையாள்கள் (ஆண்கள்) தேவை.

I. Receptionist cum Accounts Clerk (வரவேற்பாளர் - கணக்கியல் அறிவுடன் விரும்பத்தக்கது.
II. Room Boys
III. Waitors (பரிமாறுபவர்)
IV. Watcher (காவலாளி)
V. Cook (சமையல்காரர்- கீழைத்தேய மேலைத்தேய உணவு வகைகள் சமைக்கத் தெரிந்திருக்கவேண்டும்)

15.09.2003 ஆம் திகதிக்கு முன் சான்றிதழ்களுடன் விண்ணப்பிக்கவும். அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

தொடர்பு:- வி.இல. 2002, மே/பா உதயன் (26-12-14) (3131)

---

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது புதல்வன்
செல்வன்
**அந்தோனிப்பிள்ளை அன்ரன் கமிலஸ்**
(யா/ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரி, புத்தூர்)

அவர்கள் கடந்த க.பொ.த. (உயர்தர) பரீட்சையில் கலைப்பிரிவில் தோற்றி 2 A,B சித்திகளைப்பெற்று மாவட்டமட்டத்தில் 52 ஆவது இடத்தைப் பெற்று கல்லூரிக்கும் சமூகத்திற்கும் பெருமை சேர்த்துள்ளார்.

இவர் எதிர் காலத்தில் சிறந்த கல்விமானாகத் திகழ்ந்து பல பட்டங்கள் பெற்று வாழ வாழ்த்துகின்றோம்.

– குடும்பத்தினர்.

கைத்தொழில் பேட்டை வீதி, அச்சுவேலி. (21833) (25)

---

## மானிப்பாய் மெடிகிளினிக் பற்சிகிச்சை

மீண்டும் 23.08.2003 முதல் புதன், சனி, ஞாயிறு ஆகிய நாள்களில் பி.ப.3.30 மணியிலிருந்து சிகிச்சை நடைபெறுகிறது.

இத்துடன் திங்கள், புதன், ஞாயிறு காலை 9 மணியிலிருந்து பல்கட்டுதல், கிளிப்போடுதல நடைபெறுகிறது.

வெகுவிரைவில் வைத்திய நிபுணரினால் கண்சிகிச்சையும் ஆரம்பமாகும்.

- நிர்வாகம்.

சுகாதார சமூக சுற்றாடல், விவகாரசபை, மானிப்பாய். (C/29777) (26-12-14)

---

## வடமராட்சி லயன்ஸ் கழகம் நடத்தும்

### இலவச கண் சிகிச்சை முகாமும், பொது மருத்துவ முகாமும்

காலம்: 31-08-2003 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணி தொடக்கம்.
இடம்: கொற்றாவத்தை ஆரம்ப சுகாதார நிலையம்.

அன்று கண்பரிசோதனை செய்து கண்ணாடிகள் இலவசமாக வழங்கப்படும்.

அத்துடன், பல்வேறு நோய்களினால் பாதிக்கப்பட்ட நோயாளர்கள், டாக்டர்களினால் பரிசோதனை செய்யப்பட்டு மருந்துகள் வழங்கப்படும்.

கண்பரிசோதனை செய்து கண்ணாடி பெற விரும்புபவர்கள் முன் பதிவுகளை செய்யுமிடம்:

குரு.நா.கந்தசாமி J.P.
கொற்றாவத்தை ஆரம்ப சுகாதார நிலையம், கொற்றாவத்தை.
26-08-2003 தொடக்கம் காலை 8.00-12.00 மணி வரை.

லயன் ந.தங்கராசா
கழகச் செயலாளர்

(C/29775) (26-12-14)

---

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை
திருமதி ஜெயமலர் சிவலிங்கம் அவர்களின் அன்பு மாமியார்
### திருமதி சோதி மயில்வாகனம்

அவர்கள் 24.08.2003 அன்று காலமானதையிட்டு துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(21844)(21-14-12) யா/ கொட்டடி நமசிவாய வித்தியாலய நலன்புரிச் சங்கம

---

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 01 - 07 - 1923



ஆண்டவன் பிடியில் 05 - 08 - 2002

### அமரர் ஆறுமுகம் கணேசன்
(சண்முகம்)

திதி: அபரபக்க சதுர்த்தி

பன்றிக்கு பாலீந்த பரமன் பாங்கில்
தந்தையுமாய் ஆகிநின்ற தாயுமாகி
சிந்தையிலே எம்வாழ்வு செழிக்க வாழ்ந்து
நல்லைக் கந்தனுடன் சென்று கலந்தீ ஐயா!
என்றென்றும் எம் இதயத்தில் வாழ்வாய் – ஐயா!
ஓம்சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

வேலணைகிழக்கு - 2. (21832) (26-21-14-12)

---

## மரண அறிவித்தல்

### சம்பந்தமூர்த்தி ஜெயதாசன் (சூரி)

மாதகலைப் பிறப்பிடமாகவும் ஹெந்தலை வீதி, வத்தளையை வசிப்பிடமாகவும் கொண்ட சம்பந்தமூர்த்தி ஜெயதாசன் (சூரி) அவர்கள் (Rtd. Forman, Highways Dept.) 24.08.2003 ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சம்பந்தமூர்த்தி - இராசலட்சுமி தம்பதிகளின் இளைய புத்திரனும் காலஞ்சென்ற விக்கிரமரட்ண - நேசரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகனும் சுமணாவின் அன்புக் கணவரும் சந்திரதாசன் (Irrigation Dept., Vavuniya) அவர்களின் அன்புச் சகோதரனும் ஜெயசுதன் (France), ஜெயசுவேந்திரன் (சுரேன்), விஜயகீதா, கிரிசாந்தினி ஆகியோரின் பாசமிகு தந்தையாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.08.2003) புதன்கிழமை ஹெந்தலையிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக பொரளை கனத்தை இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி ஜெயதாசன்
குடும்பத்தினர்.

312/4A, ஹெந்தலை வீதி, வத்தளை.
T.P. 01 2945456
0777-399318. (C/29781) (26-14-12)

---

இலங்கை அரசு

## வடக்கு - கிழக்கு மாகாணசபை
## வடக்கு - கிழக்கு துரித மீளமைப்புத் திட்டம்
## கடன் இல. 2880 சி.இ.
### தேசிய போட்டிக் கூறுவிலை கோரல்
### (நிர்மாண வேலைகள்)
# கேள்வி அறிவித்தல் ஐ.எவ்.பி.

ஐ.எவ்.பி.இல: ஜே.எவ்./நீர்ப்/டிபிடிஎச்எஸ்/04 திகதி:28-08-2003

1. வடக்கு - கிழக்கு துரித மீளமைப்புத் திட்டத்தின் ஆகுசெலவு சார்பாக சர்வதேச அபிவிருத்தி அமைப்பிலிருந்து கடனொன்றை இலங்கை அரசு பெற்றுள்ளது. கீழுள்ள அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள நிர்மாண வேலைகளுக்கான ஒப்பந்தங்களின் கீழ் தகுதிவாய்ந்த கொடுப்பனவுகளுக்கு இக்கடனின் ஒரு பகுதியை பிரயோகிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்கு இலங்கை உட்பட சகல நிதியிடும் நாடுகளைச் சேர்ந்த தகுதி வாய்ந்த கேள்விதாரர்களிடம் இருந்து பின்வரும் வரையறுக்கப்பட்ட வழிகாட்டலின் கீழ் கேள்விகள் கோரப்படுகின்றன. ஐ.பி.ஆர்.டி (IBRD) கடன் வசதி ஐ.டி.ஏ. (IDA) நம்பிக்கையின் கீழான வசதி.
2. மாவட்ட செயலாளர் யாழ்ப்பாணம், இலங்கை அவர்களினால் முடிய கேள்விகள் தகுதியான ஒப்பந்தகாரர்களிடம் இருந்து பின்வரும் கட்டட தொகுதிகள் நிர்மாணிப்பதற்குக் கோரப்படுகின்றன.
3. மீளளிக்கப்படாத கட்டணமாக ஒவ்வொரு வேலைக்கும் 1,000/- ஐ காசாகவோ அல்லது யாழ்ப்பாணத்தில் மாற்றத்தக்கதான யாழ்ப்பாண மாவட்டச் செயலாளரின் பெயரில் அங்கீகரிக்கப்பட்ட வங்கியில் பெறப்பட்ட வங்கி ஆணையாகவோ (Draft) சமர்ப்பிப்பதன் பேரில், *பிரதம எந்திரி, கட்டடங்கள் திணைக்களம், யாழ்ப்பாணம்* அவர்களிடம் இருந்து 29.09.2003 ஆம் திகதி பிற்பகல் 15.00 மணி வரை கேள்விப் பொதிக்கான கேள்வி ஆவணங்களின் இரு பிரதிகளைப் பெற்றுக்கொள்ளலாம்.
4. ஆர்வமுள்ள, தகுதியான கேள்விதாரர்கள் கேள்விப்பத்திரங்களை பிரதம எந்திரி (கட்டடங்கள்) யாழ்ப்பாணத்தில் இலவசமாகப் பார்வையிடுவதோடு, மேலதிக விபரங்களையும் பின்வரும் முகவரியில் பெற்றுக்கொள்ளலாம்.

பிரதம எந்திரி
கட்டடங்கள் திணைக்களம் (மாகாணம்),
கடற்கரை வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி, தொலைநகல் இல. 021- 2222632

5. சமர்ப்பிக்கப்படும் கேள்வி, கேள்விகள் திறக்கப்படும் தினத்தில் இருந்து 90 நாள்களுக்குச் செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும். அத்துடன், யாழ்ப்பாண மாவட்ட செயலாளரின் பெயரில் எடுக்கப்பட்ட கேள்விப் பிணையும் கேள்விகளுடன் இணைக்கப்பட்டு, *அரசாங்க அதிபர், மாவட்ட செயலகம், கச்சேரி, யாழ்ப்பாணம்* என்ற முகவரிக்கு 30.09.2003 ஆம் திகதி பிற்பகல் 15.00 மணிக்கு முன்னர் கையளிக்கப்படல் வேண்டும். அதே தினம் கேள்விகள் திறக்கப்படும். கேள்விதாரர் அல்லது அவரின் பிரதிநிதி விரும்பின் சமுகமளிக்கலாம். மேற்குறிப்பிட்ட திகதியில் காரியாலயம் மூடப்பட வேண்டிய சந்தர்ப்பம் ஏற்படின் அதற்கு அடுத்த வேலை நாளன்று அதே இடத்தில் அதே நேரத்தில் கோரல்கள் பெறப்பட்டு திறக்கப்படும்.
6. வேறு விவரங்கள் தேவைப்படின் கேள்வி ஆவணங்களில் பார்வையிடலாம்.

### விவர அட்டவணை

| கேள்விக்குறியீடு | வேலை விவரம் | கேள்விப் பிணை ரூபா | கேள்வி ஆவணங்களின் பெறுமதி ரூபா | வேலை முடிக்கப்பட வேண்டிய காலம் |
|---|---|---|---|---|
| 1. ஜே.எவ்./நீர்ப்/டி.பி.டி. ஏச்.எஸ்.15 | மாவட்ட வைத்திய சாலை, தெல்லிப்பழையில் புற்றுநோய் சிகிச்சை நிலையம் மீள்நிர்மாணம். | 220,000/- | 1,000/- | 12 மாதம் |

7. கேள்விதாரர்கள், கேள்விதாரருக்கான செயற்பிரமாண குறிப்புகள் 4 ஆம் பந்தியில் சொல்லப்பட்ட நடைமுறைகளை ஆகக் குறைந்த தகைமைகளாகக் கொண்டிருத்தல் வேண்டும் என இத்தால் ஆலோசனை வழங்கப்படுகின்றது.

மாவட்ட செயலாளர்,
மாவட்ட செயலகம்,
யாழ்ப்பாணம்.

செ.பத்மநாதன்.
அரசாங்க அதிபர்,
மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்.

(c/29780) (25-21-12-14)

# அரசாங்க அறிவித்தல்
# கூறுவிலை கோருதல்

மனிதவள மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டம் தொடர்பாக பின்வரும் பொருள்களை கொள்வனவு செய்வதற்கு இப்பொருள்களை விற்பனை செய்யும் நிறுவனங்களிடமிருந்து கூறுவிலைகள் கோரப்படுகின்றன.

| பொருள்களின் பெயர் | தொகை | |
|---|---|---|
| 01. Ribbon (LQ-300+) | 24 | Nos. |
| 02. Filter Glass 14" | 20 | Nos. |
| 03. Scanner A4 (Canon) | 10 | Nos. |
| Scanner A3 (Canon) | 01 | Nos |
| 04. Marker (Temporary)- Black,Green, Red,Blue | 54 | Nos |
| 05. Rug (11/2 x 21/2 Rubber) | 10 | Nos |
| 06. Digital Camera (Sony) (Snipe & Vidio With floppy & Ram Drive 120MB) | 01 | No. |
| 07. Ram Drive USB Port - 120 MB | 01 | No. |
| 08. External DVD Writer 16X (Sony) | 01 | No. |
| Internal CD Writer 52X (Sony) | 10 | Nos. |
| 09. Overhead Projector (Elmo - Protable) | 01 | No. |
| 10. Laptop P4 (Campack 15" Visual With Floppy Drive & CD Rom) | 01 | No. |
| 11. Cloth Dust Cover | | (50 Meters) |

2. கூறுவிலைகளை சமர்ப்பிக்க விரும்பும் வியாபார நிறுவனங்கள் மீளளிக்கமுடியாத கேள்வி வைப்பாக ரூபா 500.00 இனை யாழ். மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்பு செயலகத்தில் செலுத்தி கூறுவிலைப் படிவங்களை 2003.08.26 ஆம் திகதி தொடக்கம் 2003.09.01 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் அலுவலக நாள்களில் மு.ப.10.00 மணி தொடக்கம் பி.ப. 3.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.

3. கூறுவிலைகளை சமர்ப்பிக்க விரும்பும் வியாபார நிறுவனங்கள் மீளளிக்கக்கூடிய கேள்விவைப்பாக ரூபா 5000.00 ஐ யாழ். மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்பு செயலகத்தில் செலுத்தி பற்றுச்சீட்டின் பிரதியை கூறுவிலை கோருதல் விண்ணப்பத்துடன் இணைத்தல் வேண்டும்.

4. பூரணப்படுத்தப்பட்ட கூறுவிலைப் பட்டியலை இருபிரதிகளில் *தலைவர், மாவட்டச் கேள்விச்சபை, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம* (அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம்) என முகவரியிடப்பட்ட நீளத்தபால் உறையில் நேரடியாகவோ தபால் மூலமாகவோ யாழ். செயலக மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்பு செயலக (கணக்காளரது) அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் 2003.09.01ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன்பாக சேர்த்தல் வேண்டும். அன்றைய தினம் பி.ப.3.00 மணிக்கு கூறுவிலைகள் திறக்கப்படும். அப்பொழுது கூறுவிலை கோரியவர்கள் அல்லது அவரது பிரதிநிதிகள் சமுகமளிக்க முடியும்.

5. கூறுவிலைகள் உள்ளடக்கிய தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் "மனிதவள மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டம் தொடர்பான பொருள்களின் கூறுவிலைகள்" எனக்குறிப்பிடல் வேண்டும்.

6. ஏற்றுக்கொள்ளப்பட்ட கூறுவிலை கோரியவர் 3 நாள்களுக்குள் என்னால் வழங்கப்பட்ட வழங்கு கட்டளைகளுக்குப் பொருள்களை வழங்கல்வேண்டும்.

**செ.பத்மநாதன்,**
தலைவர்/அரசாங்க அதிபர்,
மாவட்டக் கேள்விச் சபை.

(சி-29788)(11-16-18)

# இன்று இன்னிசைக்கச்சேரி

இன்று நடைபெறும் நல்லூர் முருகன் ஆலயத் தேர்த்திருவிழா தினத்தன்று இந்து கலாசார அமைச்சினால் நடத்தப்படும் இன்னிசையரங்கில் மாலை 6.00 மணிக்கு லண்டனில் இருந்து வருகை தந்திருக்கும் மாணவி செல்வி ஜனனி அருணாச்சலம் அவர்களின் பாட்டுக் கச்சேரி நல்லூர் கோயிலுக்கு அருகில் உள்ள நாவலா மண்டபத்தில் நடைபெறுகிறது.

பக்க வாத்திய அனுசரணையாளர்கள் :
வயலின் - செல்வன் M.ரதீஸ்குமார்
மிருதங்கம் - செல்வன் K.கஜன்
கெஞ்சிரா - செல்வன் K. நந்தகுமார்

(21867)(11-16)

உ
ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நம!

# ஆறாம் ஆண்டு நினைவலைகள்

மண்ணில்
08 - 09 - 1991



விண்ணில்
26 - 08 - 1997

## செல்வி கார்த்திகா சிவன் ஆச்சாரி

**ஆண்டுகள் ஆறு கடந்தாலும் ஆறாது எம் நெஞ்சம்**
**ஈண்டு உமது நினைவால் கலங்குகின்றோம் இன்று.**

காலஞ்சென்ற முருகன் ஆச்சாரி, காலஞ்சென்ற நாராயணன் ஆச்சாரி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் சிவன் ஆச்சாரி - பத்மாவதி தம்பதியரின் அருமை மகளும் முகுந்தன், ஸ்ரீ முருகன் ஆகியோரின் சகோதரியுமான செல்வி கார்த்திகாவின் ஆறாவது ஆண்டு நினைவுநாள் இன்றாகும்.

*ஓம் சக்தி நகைத் தொழிலகம்,*
சுன்னாகம்.
*நியூ கார்த்திகா நகைமாடம்,*
சுன்னாகம்.
*ஸ்ரீகார்த்திகா நகைத் தொழிலகம்,*
யாழ்ப்பாணம்.

*அவரை இன்று*
*அன்புடன் நினைவுகூரும்*
**குடும்பத்தினர்.**

(C/29787) (11-16)

## தரைப்பாலம் யோசனைக்கு வரவேற்பு

இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையே தரைப்பாலம் அமைக்கப்பட வேண்டுமென்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சென்னையில் தெரிவித்த யோசனைக்கு இந்திய புத்திஜீவிகள் வரவேற்புத் தெரிவித்திருக்கின்றனர்.

இவ்விரு நாடுகளுக்கும் அன்றி இப்பிராந்தியத்தின் ஏனையநாடுகளுக்கும் தரைப்பாலம் நன்மையளிக்கும் என்று அவர்கள் கூறியிருக்கின்றனர்.

சென்னை இந்து பத்திரிகையின் பிரதம ஆசிரியர் என்ராம்எம்எஸ்சுவாமிநாதன் ஆராய்ச்சி, அறக்கட்டளையின் தலைவர் எம்.எஸ். சுவாமிநாதன் ஆகியோர் பிரதமர் ரணிலின் யோசனையை வரவேற்று கருத்துத் தெரிவித்திருக்கின்றனர்.

## பாதை திறக்க படையினர் அனுமதி

தென்மராட்சி,ஓக.26

தனங்களப்பு மறவன்புலோ பகுதிகளில் காலபோக நெற்செய்கை மேற்கொள்ள அனுமதிக்கப்பட்ட நெல்வயல்களுக்கு செல்லவும் சாவகச்சேரி மீசாலை பகுதி நெற்செய்கையாளர்களின் நலன் கருதி சாவகச்சேரி - தனங்கிளப்பு வீதியூடாக செல்லவும் படைத்தரப்பில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

தனங்கிளப்பு வீதியின் மேற்குப் புறமாக நெற்செய்கை பண்ணப்படும் வயல்களுக்குச் செல்வோருக்கு சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி கிறிஸ்தவ சேமக்காலைக்கு அருகில் பாதை திறக்கப்படையினர் அனுமதி வழங்கியுள்ளதாக விவசாய சம்மேளனத் தலைவர் மா.லீலாவிநோதன் தெரிவித்தார்.

ஏற்கனவே நுணாவில்-கொல்லங்கிராய் வீதியும், நாவற்குழி-கேரதீவு வீதியில் வள்ளக்குளம்-ஆலடி வீதியும் போக்குவரத்துக்கு அனுமதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஓ117)

## அடிக்கல் நாட்டுவிழா

செம்பியன்பற்று,ஓக.26

கிளிநொச்சி மாவட்ட வைத்திய சாலையில் பெண் நோயாளர் வார்ட்டுக்கான அடிகல் நாட்டுவிழா அண்மையில் கிளிநொச்சி மாவட்ட வைத்திய சாலை வளாகத்தில் இடம்பெற்றது.

கிளிநொச்சி மாவட்ட பிரதி மாகாண சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி த.சத்தியமூர்த்தி தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திஇரா சுநாயகம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு விடுதிக்கான அடிக்கல்லை நட்டார். (ஓ-36)


**லஷ்சுமி சினிமா**
இணுவில்
விஜய், பிரியங்கா, விவேக் நடித்த
**தமிழன்**
(ரீல்ஸ்) (21821)
காட்சி நேரம் 11.00, 3.00, 7.00 (புதிய நேரம்).

**லிபேட்டி** அச்சுவேலி
அர்ஜுன், கிரண், கவுண்டமணி நடித்த
**பரசுராம்**
(ரீல்ஸ்) (C29313)
தினசரி காட்சி: 3.00, 7.00
காலை 11.00 **Red Scorpion**

**நிறைஞ்சனாஸ்** சங்கானை
ஸ்ரீகாந், த்ரிஷா நடித்த
**மனசெல்லாம்**
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு
**JUDGE & JURY**
இரவு 8.45 இற்கு.
(C29213) (31-12-17)

**ராஜா** யாழ்ப்பாணம்
28ஆம் திகதி வரை
விஜயகாந்த், கிரண், விவேக் நடித்த
**தென்னவன்**



காட்சிகள்: 10.30,2.30,6.30 (பு.நே.)
29முதல் **பாய்ஸ்**
(C29233)


## சன்மானம் வழங்கப்படும்

நேற்று சித்தன்கேணிச் சந்திக்கும் பண்டத்தரிப்புக்கும் இடையில் எரிக்சன் கறுப்பு நிற இலக்கம் 0777 729030 கையடக்கத் தொலைபேசி தவறிவிட்டது. மாறியெடுத்தவர்கள் or கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

T.P. 0777 111193

(சி-129786)(11-16)

# மரண அறிவித்தல்கள்

## விஸ்வஸ்ரீ கந்தையா பாலசுந்தரம் ஆச்சாரியார்

மயிலிட்டி வடக்கு, காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும் இல. 80A, வியாசர் வீதி, தோணிக்கல், வவுனியாவை வதிவிடமாகவும் கொண்ட பிரபல கட்டட நிர்மாணி விஸ்வஸ்ரீ கந்தையா பாலசுந்தரம் ஆச்சாரியார் அவர்கள் 24.08.2003 ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் கமலாதேவியின் அன்புக் கணவரும் செல்லம்மாவின் அன்புச் சகோதரரும் திருவருட்செல்வி, கிருபராசா, செந்தூர்ச்செல்வி ஆகியோரின் அன்புத் தந்தையாரும் கருணாகரனின் அன்பு மாமானரும் குணப்பிரசாத்தின் அன்புப் பேரனாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**வே. அம்பிகைபாகன் (மருமகன்)**
முறைசாராக் கல்விச் செயற்திட்ட அலுவலர்,
வடமராட்சி, உடுப்பிட்டி.

(C/29783)(11-16)

## அருட் சகோதரி மரிய கொர்னேலியா ஞானமுத்து

பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும், திருக்குடும்ப துறவறசபையைச் சேர்ந்தவரும், தற்பொழுது இளவாலை கன்னியர்மடத்தில் இளைப்பாறிய வருமான அருட் சகோதரி மரிய கொர்னேலியா ஞானமுத்து அவர்கள் நேற்று (25.8.2003) திங்கட்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

இவரது பூதவுடல் இன்று (26.8.2003) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு திருக்குடும்ப கன்னியர் மடத்து சிற்றாலயத்தில் நடைபெறும் இரங்கற் திருப்பலியின் பின் இளவாலை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்:
**அருட் சகோதரி, ஸ்ரெலா துரைசாமி**
திருக்குடும்ப மாகாண இல்லம்,
121, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

(21861)

## திருமதி சோதி மயில்வாகனம் (மையிலன்ஸ்)

காரைநகர், அறுகம்புலம், தங்கோடையைப் பிறப்பிடமாகவும் இல.05, சிராம்பியடி, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சோதி மயில்வாகனம் அவர்கள் நேற்றுமுன்தினம் (24.08.2003) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையா மயில்வாகனத்தின் (உரிமையாளர்-மலர் ரெக்ஸ், மையிலன்ஸ்) அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை- வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு மகளும் பொன்னையா - சின்னக்குட்டி தம்பதிகளின் மருமகளும் மீனாட்சியின் அன்புச் சகோதரியும், தியாகலிங்கம், யோகலிங்கம், சிவலிங்கம், தேவலிங்கம் (மலர் ரெக்ஸ்), தவமலர், கனகமலர் ஆகியோரின் பாசமிகு தாயாரும் பவளமலர், சிவகலை, ஜெயமலர், ரஜனா, தில்லைநாதன் (நாதன் ஸ்ரோஸ்), இரத்தினராசா (மதுரா நகை மாடம்) ஆகியோரின் அன்பு மாமியாரும் வேலுப்பிள்ளை, ஆறுமுகம் (ஆறுமுகம் ரெக்ஸ்) சுந்தரம்மா, கந்தையா (மதவாச்சி) ஆகியோரின் மைத்துனியும் அருள்சோதி, நவசோதி, சுகந்தினி, சிவரூபன், லோஜினி, தனேஸ், தருன், சிவசங்கர், சிவகுமரன், ஜனனி, ஜதுர்சன், டினேஸ், தனச்சயன், சைந்தவி ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.08.2003) செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணிக்கு தங்கோடையில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் சாம்பலோடை இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தங்கோடை,*
*காரைநகர்.*
(21862) (16-11)

தகவல்:
**பிள்ளைகள்**
(மலர் ரெக்ஸ்)

## திருமதி பூமணி சுப்பிரமணியம்

சுதுமலையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி பூமணி சுப்பிரமணியம் 24.08.2003 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற K.S.சுப்பிரமணியம் (ஓய்வுபெற்ற ஆசிரியர், விடுதி அதிபர், யாழ்.இந்துக்கல்லூரி) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற C.M.பொன்னையா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற சின்னத்தம்பி தம்பதிகளின் மருமகளும் குணபாக்கியம் (ஓய்வு பெற்ற ஆசிரியை, யா/இந்துமகளிர் கல்லூரி, இராம்நாதன் கல்லூரி, சுதுமலை சிந்மயபாரதி), பரராஜசேகரம் (பொறியியலாளர், G.T.Z), மகேஸ்வரி, காலஞ்சென்ற நரேந்திரன் (DGM-Mechanical Engineer, RVDB factory) மற்றும் மனோரஞ்சிதம் (ஓய்வுபெற்ற ஆசிரியை, யா/இந்துமகளிர் கல்லூரி), Dr.சந்திரோதயம் (U.K.), சிறீதரன் (கட்டடத் திணைக்களம் - வவுனியா, மன்னார்) ஆகியோரின் அன்புத் தாயாரும் சண்முகலிங்கம் (ஓய்வுபெற்ற பிரதி அதிபர், பலாலி ஆசிரிய கலாசாலை), ராஜேஸ்வரி (ஆசிரியை), திசவீரசிங்கம் (ஓய்வுபெற்ற ஆசிரியர், யா/இந்துக்கல்லூரி), கலாநிதி இராமநாதன் (ஓய்வுபெற்ற பிரதி அதிபர், யா/வைத்தீஸ்வராக் கல்லூரி), Dr.நடனசபாபதி (U.K.), சகுந்தலாதேவி ஆகியோரின் அன்பு மாமியாரும் Dr.வசந்தி (U.K.), Dr.சுகந்தி (ஆஸ்திரேலியா), ஜெயந்தி, சிறிதயாளன் (Russia), கலாயினி (ஆஸ்திரேலியா), Dr.பிரேமினி (U.K.), லோஜினி (Com.வங்கி, கொழும்பு), ஈஸ்வரராஜ் (Canada), தர்ஷினி (U.S), தர்ஷன், அரவிந்தன் (U.K.), ஆனந்தி (மருத்துவபீடம் - கொழும்பு), கீதா (Canada), பிரிந்தன், (U.K.), மகிந்தன் (U.K.), சோபுனா, வினோதன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் மயூரி, மிதிலா, அஸ்வினி, பவித்திரா, ரம்மியா, மகிஷா ஆகியோரின் அன்புப் பூட்டியும் காலஞ்சென்ற இராமநாதன், பராசக்தி, லீலா (ஓய்வுபெற்ற உபஅதிபர், யா/இந்துமகளிர் கல்லூரி), Dr.பத்மநாதன், மனோன்மணி, காலஞ்சென்ற புகனசிங்கம், நேசராஜன் ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.08.2003) புதன்கிழமை காலை 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக தாவடி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சுதுமலை மத்தி,*
*மானிப்பாய்.*
(21864)(11-16)

தகவல்:
**பரராஜசேகரம் (மகன்)**

### கிழக்கில் முஸ்லிம்களுக்குப் போதிய பாதுகாப்பில்லை:

# மு.கா. எம்.பிக்களான அன்வர்,ஹரீஸ் எதிர்க்கட்சி வரிசையில் அமர முடிவு

கொழும்பு,ஓக.26

கிழக்கில் முஸ்லிம்களுக்கு அரசு வழங்கும் பாதுகாப்பு போதுமான தல்ல என்று குற்றஞ்சாட்டியிருக்கும் முஸ்லிம் காங்கிரஸின் இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் எதிர்க் கட்சி வரிசையில் அமருவதென்று முடிவு செய்திருக்கின்றனர்

திகாமடுல்ல மாவட்ட எம்.பி அன்வர் இஸ்மாயில் இத்தகவலை நேற்று தெரிவித்தார்.

முஸ்லிம்களின் பாதுகாப்புக்கென 500 பொலீஸாரை புதிதாக நியமிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது. தமிழ், முஸ்லிம், சிங்கள இளைஞர்களே பொலீஸ் சேவைக் குச் சேர்த்துக்கொள்ளப்படவுள்ளனர்.

ஆனால், இதற்கு தமிழ்க் கூட்டமைப்பு எதிர்ப்புத் தெரிவித்துள்ளது, தமிழ்க் கூட்டமைப்புக்குச் செவிசாய்த்து அரசாங்கம் நடந்துகொள்ளுமானால் நானும் ஹரீஸ் எம்.பியும் எதிர்க்கட்சித் தரப்பில் அமருவதைத் தவிர வேறுவழியில்லை

- இவ்வாறு அன்வர் இஸ்மாயில் எம்.பி. தெரிவித்தார். (ஒ)

## அமிர்தலிங்கத்தின் பிறந்தநாள் நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஓக.26

தமிழர் விடுதலைக் கூட்டணியின் மூத்த தலைவர்களில் ஒருவரான அமரர் அ.அமிர்தலிங்கத்தின் 76 ஆவது பிறந்தநாளையொட்டி இன்று முற்பகல 11 மணிக்கு கூட்டணியின் யாழ். அலுவலகத்தில் விசேட நிகழ்வு இடம் பெறவுள்ளது.

இதில் பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் தலைமையில் நினைவுரைகளும் இடம்பெறும். (ஒ-3)

## தொடர்புகொள்ளக் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஓக.26

குடாநாட்டில் கீழ்காணபவர்கள் உடனடியாக செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் யாழ்.அலுவலகத்துடன் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

திருமதி பாலன் றஞ்சினிதேவி, காலிங்கன் தியேட்டர் அகதி முகாம், இணுவில் அல்லது சுப்பர்மடம், பருத்தித்துறை. திருமதி தேவசகாயம் ராணிமலர், இணுவில் ஆஸ்பத்திரி அகதி முகாம், இணுவில். திருமதி பிரேமராஜா ராஜேஸ்வரி, 6,3ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். திருமதி வேலாயுதம் சத்தியபாமா, அளவெட்டி தெற்கு, அளவெட்டி. திருமதி குணரட்ணம் பாக்கியம் கொம்பனிபுலம், அளவெட்டி. திருமதி சேவியர் பிரான்சிஸ்கா, 112,மணியம் தோட்டம், கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.

## அரசுப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஹெலிகொப்டர் மூலம் வந்தடைந்த போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் முற்பகல் 10 மணியளவில் திருகோணமலை கண்காணிப்புக் குழு அலுவலகத்தில் கூட்டமொன்றை நடத்தினர்.

பின்னர் படகு மூலம் சம்பூருக்குச் சென்று, புலிகளின் தலைவர்களை சம்பூர் அலுவலகத்தில் சந்தித்தனர்.

கிழக்குப் பாதுகாப்பு நிலைமை, புலிகளின் குரங்குபாஞ்சான் முகாம் ஆகிய விடயங்கள் குறித்து இச்சந்திப்பில் பேசப்படும் என்று கண்காணிப்புக் குழுவினர் ஏற்கனவே தெரிவித்திருந்தனர்

திருகோணமலை மாவட்ட கண்காணிப்புக்குழுத் தலைவர் ப்ஃஹூனும் இச்சந்திப்பில் கலந்துகொண்டார்.

இச்சந்திப்புக் குறித்துக் கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் கருத்துத் தெரிவிக்கையில் -

குரங்குபாஞ்சான் முகாமை அகற்றுவது தொடர்பாக புதிய யோசனை ஒன்றை விடுதலைப் புலிகளிடம் தெரிவித்துள்ளோம். இந்த யோசனை குறித்து தலைமையுடன் ஆராய்ந்து அடுத்த பத்து நாள்களில் புலிகள் பதில் தருவர் என எதிர்பார்க்கின்றோம் என்று தெரிவித்தார்.

இந்த முகாம் பிரச்சினை பாரிய யுத்தத்துக்கு வழிகோலிவிடக்கூடாது என்று புலிகளின் தளபதி பதுமனிடம் வலியுறுத்தியதாகவும் அவர் மேலும் சொன்னார். (ஒ-3-12)

## தியாகி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைவரும், தமிழீழ எழுச்சிப் பேரவைச் செயலாளருமான சொலமன் சூ. சிறில், மாவீரர் கப்டன் றொஷானின் தந்தை மா.இரத்தினசிங்கம், யாழ்.பல்கலைக்கழக புவியற்றுறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி சூசை ஆனந்தன் ஆகியோர் ஏற்றினர்.

தமிழீழத் தேசியக் கொடியை யாழ் மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி ஏற்றிவைத்தார். அதனைத் தொடர்ந்து மாவீரர் தூயவனின் தந்தையார் பெ.செல்லத்துரை நினைவுத் தூபியைத் திரைநீக்கம் செய்துவைத்தார்.

நினைவுத்தூபிக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.கே.சிவாஜிலிங்கம், அ.விநாயகமூர்த்தி ஆகியோரும் திலீபனின் திருவுருப் படத்திற்கு ஓய்வு பெற்ற கிராமசேவயாளர் க.சிவராசாவும் மலர்மாலை அணிவித்தனர்.

இதனைத் தொடர்ந்து போராளிகள் மற்றும் பொதுமக்கள் என பெரும் எண்ணிக்கையானோர் திலீபனின் நினைவுத் தூபிக்கு மலர் அஞ்சலி செலுத்தினர்.

யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.கே.சிவாஜிலிங்கம், அ.விநாயகமூர்த்தி, யாழ் மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி. இளம்பரிதி, தமிழர் விடுதலை அணியின் தலைவர் மா.க.ஈழவேந்தன் உட்பட பலர் நினைவுரை நிகழ்த்தினர். (ஒ-5)

# விமானப்படைத் தளபதி பாகிஸ்தானுக்கு விஜயம்

இலங்கை விமானப்படையின் தளபதி எயார் மார்ஷல் ஜி.டி.பெரேரா ஒருவார விஜயம் மேற்கொண்டு நேற்றுப் பாக்கிஸ்தான் போய்ச் சேர்ந்தார்.

பாகிஸ்தான் விமானப்படையின் அழைப்பை ஏற்று. விஜயம் மேற்கொண்டிருக்கும் பெரேரா, பாகிஸ்தான் பாதுகாப்பு அமைச்சர், விமானப் படைத் தளபதி ஆகியோரைச் சந்திப்பார்.

## திருகோணமலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போதிலும், மக்கள் சந்தைகளுக்குச் செல்லவில்லை. மணிக்கூண்டு கோபுரச் சந்தியில் இருக்கும் சில கடைகளிலும் வியாபாரம் நடைபெறவில்லை.

தூர இடங்களிலிருந்து திருமலைக்கு வந்திருந்த வாகனங்கள் அவசர அவசரமாக திரும்பிச் சென்றன. வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவைத் தவிர ஏனைய செயற்பாடுகள் செயலிழந்திருந்தன. எந்தவித அசம்பாவிதங்களும் இடம் பெற்றதாகத் தகவல்கள் இல்லை.

## ஒன்பது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாதன் (வயது 26), சீலன் (வயது 25) ஆகிய மீனவர்களே காணாமற்போயுள்ளனர். இவர்களில் இருவர் பாடசாலை மாணவர்கள் ஆவர். பாடசாலை விடுமுறை காரணமாக அவ்விருவரும் மீன்பிடிக்கச் சென்றுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

நேற்று மூதூர் கிழக்கில் ஹர்த்தால் காரணமாக பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யமுடியவில்லை. மீனவர்கள் காணாமற்போன விடயத்தை விடுதலைப் புலிகள் கண்காணிப்புக் குழுவினரின் கவனத்துக்குக் கொண்டுவந்துள்ளனர். (ஒ)

## வீதித் தடையை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தில் தொண்டர் ஒருவர் காயமடைந்தார்.

இந்தச் சம்பவத்தைக் கண்டித்து உற்சவகால சிறப்புச் செயலணியினர் அறிக்கை ஒன்றை விடுத்துள்ளனர்.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப் பட்டிருப்பதாவது:-

சட்டம், ஒழுங்கைப் பாதுகாக்க வேண்டிய பொலீஸாரே அதனை மீறி அடாத்தான முறையில் நடந்துகொண்டமை வெறுக்கத்தக்க ஒரு விடயமாகும்.

ஏற்கனவே ஆலய சூழலில் வீதித் தடை சம்பந்தமாக இடம்பெற்ற கூட்டத்தில் பொலீஸாரும் கலந்துகொண்டு வீதித்தடைகள் அமைக்கப்படுவதை ஏற்றுக்கொண்டுள்ளனர்.

இந்த முடிவை எடுத்த பொலீஸாரே தற்போது குழப்பத்தை ஏற்படுத்தக் கூடிய முறையில் நடந்துகொள்வது பக்தர்களிடையே வெறுப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஆலய வீதியில் தற்காலிகமாகச் செயற்படும் பொலீஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரியிடம் தொண்டர்கள் இந்த அடாவடித்தனம் குறித்து முறையிட்டபோது பொலீஸார் வரும்போது தடைகளை அகற்றிவிடவேண்டும் என்று அந்த அதிகாரி கூறியுள்ளமை வேதனைக்குரிய விடயமாகும்.

பொலீஸாரின் இத்தகைய அநாகரிகமான செயற்பாடுகள் தமிழ் மக்களிடையே பொலீஸார் சம்பந்தமான அவநம்பிக்கையை மேலும் வலுப்படுத்திச் செல்லும்.

நேற்றையதினம் சீருடையில் இருந்து - கடமையில் இருந்த - தொண்டர்களின் சொல்லை ஊதாசீனப்படுத்திவிட்டு பொலீஸார் வீதித் தடையை உதைத்துத் தள்ளிச் சென்ற நிகழ்வு கண்டிக்கப்பட வேண்டியதாகும் - என்றுள்ளது.(ஒ-ரி-3-5.86)


## இந்திய பரம்பரை ஜோதிடர்



அருள்வாக்கு அம்பிகா அம்மா

மீண்டும் யாழ்.புண்ணிய பூமிக்கு வருகை.

கைரேகை. ஜாதகம் பார்க்கப்படும்.

ஒவ்வொரு நாளும் சாத்திரம் சொல்லப்படும்.



உங்களுக்கு எந்தப் பிரச்சினைகள் ஆனாலும் கவலை வேண்டாம்.
உடனே அம்மாவைச் சந்தியுங்கள்; நன்மை அடையுங்கள்.

அம்மாவைச் சந்திக்கும் இடம்:-

அருள்வாக்கு அம்பிகா அம்மா

மடோனா லொட்ஜ்,

121, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

ஸ்ரீமுருகன் ஜுவல்லர்ஸ் / நியூ லிங்கம் கூல்பார் அருகில்.

(20545)(31-12-18)



## SCC விஷேட கணனிப்பயிற்சி நெறிகள்

இந்தியா, மலேசியா, கனடா மற்றும் அமெரிக்கா எங்கும் வியாபித்திருக்கும் பெருந்தொகையான கணனிசார் வல்லுனர்களை உருவாக்கியதும், IBM மற்றும் Microsoft நிறுவனங்களின் ஆதரவைப் பெற்றுள்ளதுமான Aram Limited (இந்தியா) நிறுவனத்தினரும், SCS நிறுவனத்தினரும் இணைந்து இதுவரையில் யாழ் மாவட்டத்தில் அறிமுகப்படுத்தப்படாத பாடத் திட்டங்களுடன் தனது சேவையைத் தொடங்கியுள்ளனர் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**DIPLOMA IN PROFESSIONAL MICROSOFT OFFICE XP**

♦ Fundamentals of Information Technology ♦ Outlook ♦ Word ♦ Excel ♦ MS Money ♦ MS Project ♦ Access ♦ PowerPoint ♦ Binder ♦ MS Schdule ♦ Internet, E-mail

Duration 6 - 7 Months

**DIPLOMA IN DESKTOP PUBLISHING**

♦ Word ♦ Power Point ♦ Pagemaker ♦ Corel Draw ♦ Photoshop

Duration 4 Months

**DIPLOMA IN COMPUTER PROGRAMMING**

♦ Information Technology ♦ SAD ♦ MIS, DBMS, RDBMS, ORDBMS
♦ Visual C++(System, Bios, Memory, Disk, Network Programming) ♦ Visual Basic (Com & Dcom Level)
♦ Netware administration programming System Diagnostic Programming ♦ Protocol Builds - up
♦ Visual Fox Pro ♦ Oracle ♦ Java ♦ Internet, Interfacing programming

Duration 12 Months

**DIPLOMA IN COMPUTER HARDWARE ENGINEERING**

♦ Chip & Card level Trouble shooting ♦ Assembling ♦ Various Mother Board Handling ♦ Upgrading ♦ Fault Finding ♦ Repairing ♦ Servicing ♦ Printer, Scanner & Com device management ♦ Software Installation ♦ Configuring Internet Interfacing & Trouble shooting ♦ Networking & Etc...

Duration 4 -5 Months

**DIPLOMA IN VISUAL BASIC** Duration 4 Months

**DIPLOMA IN VISUAL FOXPRO** Duration 4 Months

**DIPLOMA IN AUTOCAD** Duration 4 Months

**DIPLOMA IN C++** Duration 4 - 5 Months

**DIPLOMA IN NETWORK ENGINEERING** Duration 4 Months

- உத்தியோகத்தர்களுக்கான மாலை நேர வகுப்புக்கள்.
- விரிவுரைகள் யாவும் இந்தியாவிலிருந்து வருகை தந்த அனுபவம் வாய்ந்த விரிவுரையாளர்களால் மேற்கொள்ளப்படும்
- கூடிய நேர செய்முறைப்பயிற்சி
- குறைந்த கட்டணம்
- இலங்கையிலும் வெளிநாடுகளிலும் வேலைவாய்ப்பைப் பெற்றுக் கொள்வதற்கான உதவிகள் வழங்கப்படும்.
- Online Classes

பயிற்சி ஆரம்பம் 30.08.2003

**Soft View Computer College**

www.arammenporulagam.com Arammenporulagam@eth.net

43, Arasady Road, Thaddatheru Junction, Jaffna, Sri Lanka. T.P: 021 2225170

Arya Gowdar Road, West mambalam Road, Chennai 600 033, India. T.P : +91-44-4891286



## ரைப்பிஸ்ட் தேவை

கணனியில் தமிழ், ஆங்கில ரைப்பிங் தெரிந்த பெண் பிள்ளைகள் தேவை.

**S.T.R**

81, பலாலி வீதி, கந்தர்மடம்.

(21825) (12-11-17)



## தென்னிந்தியாவில் இருந்து

யாழ்ப்பாணம் என்னும் புண்ணிய பூமிக்கு யாழ்ப்பாண மக்களின் வேண்டுகோளுக்கிணங்கி 2ஆவது முறையாக வருகைதந்துள்ள பரம்பரை சோதிடக் கலையில் புகழ்பெற்ற சிவபால ஜோதிடர்



ராஜகுருசாமி அவர்கள்

யாழ்.மக்களுக்கு ஒரு வேண்டுகோள்!

சோதிடர் வரும் 01.09.2003 முதல் 10.09.2003 வரை மட்டுமே தங்கவுள்ளார். ஆகவே, ஜாதகம் கொடுத்தவர்கள் உடன் வந்து பெற்றுக் கொள்ளவும்.

தாயகம் செல்கிறார் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

(29-11-17) ராஜகுருசாமி T.P. 5867

மிலன்ஸ் மல்ரி கொம்பிளக்ஸ்

60/1 (112), TEMPLE ROAD (Near ICRC), JAFFNA.

(21768)


# மரண அறிவித்தல்கள்

## செல்வி பரமேஸ்வரி சின்னத்தம்பி

பன்னாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட செல்வி பரமேஸ்வரி சின்னத்தம்பி நேற்று (25.08.2003) திங்கட்கிழமை மாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சவாரி சின்னத்தம்பியின் அன்பு மகளும் சிவபாலசுப்பிரமணியம் (தொண்டர்), அன்னபூரணம், காலஞ்சென்ற நல்லதம்பி, புவனேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் சி.தங்கமுத்துவின் மைத்துனியும் அருள், சிவா, ராசன் (டென்மார்க்) ஆகியோரின் சிறிய தாயாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.08.2003) செவ்வாய்க் கிழமை சண்டிலிப்பாய் ஜெயம்சுகி இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நண்பகல் 12 மணியளவில் தகனக்கிரியைக்காக விலாவெளி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி.சிவபாலசுப்பிரமணியம்
(தொண்டர் - சகோதரன்)

*வட்டு. கிழக்கு,*
*வட்டுக்கோட்டை.* (21868) (29-11-17)

## வண. எஸ்.பி.ஜெயசிங்கம்

தென்னிந்திய திருச்சபையின் இளைப்பாறிய ஊழியர் வண.எஸ்.பி.ஜெயசிங்கம் அவர்கள் நேற்று (25.08.2003) மதியம் காலமானார்.

அன்னார் சுன்னாகத்தைச் சேர்ந்த திரு.திருமதி செல்லத்துரை பாலசிங்கத்தின் மகனும் கிறேஸ் புஸ்பமணியின் கணவரும் காலஞ்சென்ற மாணிக்கசிங்கம், திருமதி தவராஜசிங்கம், இரட்ணசிங்கம்,செல்வி இராசமலர், செல்வி யோகராணி, ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதி ஆராதனை நாளை(27.08.2003)புதன்கிழமை மாலை 3.00 மணிக்கு உடுவில் தென்னிந்திய திருச்சபை ஆலயத்தில் நடைபெற்று பூதவுடல் உடுவில் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி கிறேஸ் புஸ்பமணி
(மனைவி)

*வில்லியம் மேதர் ஞாபகார்த்த*
*பெண்கள் நிலையம்,*
*மருதனார்மடம், சுன்னாகம்.* (21868) (29-11-17)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 26.08.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.